# தென்றல்

பதிவு இலக்கம் : 391910

காற்று : 04 சுகந்தம் : 12 (சித்திரை - ஆனி) 2011




விருது பெற்ற இதழாசிரியர்கள்!



கலாபூஷணம் மூ.அருளம்பலம்

"தென்றல்" நான்காவது ஆண்டில்.......

65/=

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!






# தென்றல்

# THENDRAL

34/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு
தொ.பே : 077 - 6983597
பெக்ஸ் : 065 - 2227542
Email:- kirupabatticaloa@yahoo.com

**ஆசிரியர்**
க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**
திருமதி.சிறிதேவி சங்கர்
திரு.கே.வாமதேவன்
திருமதி.கவிதா.கிருபாகரன்
திரு.ஆ.அரசரெத்தினம்

**ஆலோசகர்**
இரா. நாகலிங்கம்
(அன்புமணி)

**ஓவியம்**
சி.டானியல்

**கணணி வடிவமைப்பு**
அ.ஜெயலக்ஸ்மி

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ-ர்)

## "தென்றல்" நாலாவது ஆண்டில்!

உங்கள் "தென்றல்" - தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை சித்திரை 06 ஆம் நாளில் (புதன் கிழமை) மூன்றாவது ஆண்டை பூர்த்தி செய்து நான்காவது ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கிறது.

இவ்வேளையில் தை 05 ஆம் நாளில் (புதன்கிழமை) கொழும்பு - வெள்ளவத்தை இராமகிருஸ்ணமிஷன் மண்டபத்தில் இடம் பெற்ற உலகத் தமிழ் சிற்றிதழ்கள் சங்க ஆறாவது மாநாட்டில் "தென்றல்" கலை இலக்கிய, இதழியல் துறையில் சிறப்பாக பணி புரிந்தமைக்காக மேற்படி சங்கம் "மணவாளன் இலக்கிய விருது" வழங்கிக் கௌரவித்தது.

இம்மூன்றாண்டு காலப் பகுதியில் எமது வளர்ச்சியில் பங்கு கொண்டு எம்மோடு இணைந்திருந்த எழுத்தாளர்கள், ஊடக வியலாளர்கள், வாசகர்கள், விளம்பரதாரர்கள் அனைவரும் இவ்விருது தென்றலுக்கு கிடைக்க வழிசமைத்ததை இவ் வேளையில் எண்ணிப்பார்க்கிறோம்.

"தென்றல்" இதழ் வெளிவந்த 2008 காலப் பகுதியில் இத் "தென்றல்" இரண்டு, மூன்று இதழ்களுடன் நின்று விடும்

என்று பலர் கூறினர். இன்னும் சிலரோ தரமில்லை என்றனர். இவற்றையெல்லாம் கடந்து இன்று மூன்றாவது ஆண்டை நிறைவு செய்யும் தறுவாயிலே தென்றலுக்கு உயர் விருது கிடைத்திருப்பதானது. **"தென்றலை"** மேலும் வளர்ச்சியடைய வழி கோலியுள்ளது.

இந்நிலையை அடைய நாம் பல்வேறு இன்னல்கள் - வேதனைகளைக் கடந்து வந்திருக்கின்றோம்.

இதுவரை காலமும் எம்மோடு - எம் வளர்ச்சியில் பங்கு கொண்ட எழுத்தாளர்கள்,ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள், வாசகர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் அனைவரையும் எண்ணிப்பார்க்கும் அதே வேளை மனதாரப் பாராட்டுகின்றோம்.

**என்றென்றும் அன்புடன்**
**-ஆசிரியர்-**

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 300/= | US$10 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$ 50 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்"இலவசமாக வழங்கப்படும்.

### விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

### அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.





உலகின் செம்மொழித் தகுதி பெறுவதற்கு தகைமைகள் பல வேண்டும். தொன்மையான, தொடர்ச்சியான, உலகப் பொதுமையான, மனித விழுமியங்களை தன்னகத்தே கொண்டதான, எளிமையான, இனிமையான இலக்கியங்களும் மொழியின் பழமை, செழுமை, தனித்துவம், கட்டுக்கோப்பு என்பவற்றைப் பேணுகின்ற இலக்கணங்களும் முதன்மை பெறுகின்றன. பேசும் போதும், வாசிக்கும் போதும், பாடும் போதும், நடிக்கும் போதும், எழுதும் போதும் அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் செம்மொழியாக தகுதி பெற்ற எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை பேணி வளர்க்க முயல்வோமாக!

# இனிக்கின்ற தமிழ் இலக்கணம்

*கலாபூஷணம், ஆறுமுகம், அரசரெத்தினம் -*

உலகியலையும் இணைத்து இலக்கியம் படைத்து அதற்கேற்ப இலக்கணம் இயற்றிய பெருமை செம்மொழியாம் தமிழுக்கு உண்டு. இலக்கண விதிகளை விளங்கிக் கொண்டால் அவை தேனாக இனிக்கும். தொல் காப்பியம், நன்னூல் என்பவற்றில் உள்ள இனிக்கின்ற இலக்கண விதிகள் சிலவற்றை தேனுகர் வண்டாகி சுவைப்போம் வாருங்கள்.

புத்தகங்களை **"நூல்"** என பெயரிட்டமைக்கு உலகியலோடு ஒட்டியதாக நன்னூல் சூத்திரம் இரண்டு வகையான விளக்கம் தருகிறது. **"பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாக"** (நன், பாயிரம் -24) என்ற சூத்திரப்படி தன் சொற்கள் பஞ்சாகவும் செய்யுள் இழையாகவும் செவ்விய சொற்களை அறிந்த புலவன் நூலை நூற்கின்ற பெண்ணாகவும் குறையாது பேசுகின்ற வாய் கையாகவும் அறிவு இராட்டினக் கதிராகவும் உவமிக்கப்பட்டு பஞ்சினால் நூல் ஆக்கப்படுவது போல் சொற்களால் புத்தகம் ஆகும் என்றார். **"உரத்தின் வளம் பெருக்கி"** (நன், பாயிரம் -25) என்ற சூத்திரம் கோணல், மாணல், வளைவு, நெளிவுள்ள மரத்தின் குறைபாடுகளை நூலடித்து அறுத்துக் கழித்து நேரிய மரத்தினை பெறுவது போல் நல்ல புத்தகங்களும் ஐயம், திரிபு, அறி யாமை நீக்கி மனத்தின்

கோட்டம் தீர்ப்பதால் **"நூல்"** என்று உவமையாகு பெயராக விளக்கியுள்ள உலகியல் சுவைக்கும் போது இனிக்கிறது.

ஒலி வடிவிலும் வரிவடிவிலும் எழுத்துக்கள் பயன்படுகின்றன. மொழிக்கு முதற் காரணமாகிய அணுத்திரளே எழுத்தென்ற நுட்பத்தை **"மொழி முதற் காரணமா மணுத் திரளொலி எழுத்து"** (நன், எழுத்தியல் - 58) என்று கூறுகிறது. எழுத்துக்கள் ஒலிக்கின்ற கால அளவு **"மாத்திரை"** எனப்படும். **"இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை"** (நன், எழுத்தியல் - 100) அதாவது இயல்பான மாந்தரின் சுபாவத்தில் எழுகின்ற கண்ணிமைப் பொழுது அல்லது கைநொடிப் பொழுது ஒரு மாத்திரை என்பது இதன் விளக்கம். உயிரளபெடை - 3, நெடில் எழுத்து - 2, குறில், ஐகாரக்குறுக்கம், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் - 1/2, மகரக்குறுக்கம் ஆய்தக் குறுக்கம்- 1/4 என்று மாத்திரை அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தமிழில் சொற்கள் இணைவதை **"புணர்ச்சி"** என்றனர். சேர்த்தெழுத வேண்டிய சொற்களில் முதலில் நிற்பது **"நிலைமொழி"** அதனோடு வந்து சேருவது **"வருமொழி"** நிலைமொழியும் வருமொழியும் புணர்வதை இயல்பு புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி என இரு பிரிவாக்கினர். நிலைமொழி, வருமொழி என்பவற்றில் எதுவித மாற்றங்களும் இன்றி புணர்வது இயல்பு புணர்ச்சி, மழைநீர், மண்வெட்டி என்பன உதாரணங்கள், நிலைமொழி, வருமொழிகளில் தோன்றல், திரிதல், கெடுதல் என்ற விகாரங்கள் ஏற்படுவதை கருத்தில் கொண்டு விகாரப் புணர்ச்சியை 3 வகையாக பெயரிட்டனர். கடல் + கரை என்பதை புணர்த்தி எழுதும் போது கடற்கரை என்று எழுதுகிறோம். நிலைமொழி ஈற்றில் உள்ள **"ல்"** என்ற மெய்யெழுத்தும் வருமொழி முதலில் உள்ள **"அ"** என்ற உயிரெழுத்தும் இல்லாமல் போய் **"ல"** என்ற எழுத்து வந்துள்ளமையால் பல சந்தேகங்கள் எழுவதுண்டு. இது தோன்றல், திரிதல், கெடுதல் புணர்ச்சி எனத் தடுமாறுவ துண்டு. **"உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே"** (நன், மெய் - 204) என்ற சூத்திரப்படி மெய் எழுத்தோடு உயிர் எழுத்துச் சேர்வது இயல்பு புணர்ச்சியாகவே கொள்ளப்படும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கின்ற உகரத்தை இலக்கணிகள் குற்றியலுகரம், உகரக்குறுக்கம் என்பர். முற்காலத்தில் குற்றியலுகர எழுத்தை





அறிந்து கொள்வதற்கு அவ்வெழுத்தின் மேல் புள்ளி வைப்பது வழக்கமென்பதை **"மெய்யின் இயற்கை புள்ளியொரு நிலையல்", "எகர, ஒகரத் தியற்கையும் அற்றே", "குற்றியலுகரமும் அற்றென மொழிப"** (தொல், எழுத் :- 15,16,105) என்ற சூத்திரங்கள் மூலம் அறியலாம். இக்கால எழுத்து வழக்கில் அது நடைமுறையில் இல்லை. பரீட்சைகளில் குற்றியலுகரம் பற்றி பல்வேறு மட்டங்களிலும் கேள்விகள் கேட்கப்படுகின்றன. **"நெட்டெழுத்திம் பரும் தொடர்மொழி ஈற்றும் குற்றியலுகரம் வல்லா றூர்ந்தே"** (தொல், எழு- 36) **"நெடிலோய்தம் உயிர்..."** (நன் - எழு- 94) என்ற சூத்திரங்கள் குற்றியலுகரம் பற்றிக் கூறுகின்றன. குற்றியலுகரச் சொற்களை இலகுவாக இனங்காண பின்வரும் பரிசோதனைகள் உதவும். சொல்லின் இறுதியில் கு,சு,டு,து,பு,று என்ற ஆறு எழுத்துக்களுள் ஒன்று வரும். அச்சொல் இரண்டு எழுத்தால் ஆனதாயின் முதல் எழுத்து நெடிலாக இருத்தல் வேண்டும். இரண்டுக்கு மேற்பட்ட எழுத்தெனில் அது பெயர்ச் சொல்லாயின் குற்றியலுகரமா கும். உதாரணமாக 01 தொடக்கம் 06 வரையான சொற்களைக் காட்டலாம்.

01. நாகு
02. காசு
03. கறுப்பாடு
04. ஆணிமுத்து
05. கடப்பு
06. கருப்பஞ்சாறு

மேலும் நிலைமொழி முதலில் உயிர்எழுத்து வந்தால் **"உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும்"** (நன் - உயிர்- 164) என்ற சூத்திரப்படி கடப்பு + அழகு = கடப்பழகு எனப்புணரும். வருமொழி முதலில் யகரம் என்ற எழுத்து வந்தால் குற்றியலுகரம் குற்றியலிகரமாக புணரும் என்பதை **"யகரம் வர குறள் உத்திரி இகரமும் அசைச் சொன் மியாவின் இகரமும் குறிய"** (நன் - எழு - 93) என்ற சூத்திரம் விளக்கும். உதாரணம் நாகு + யாது = நாகியாது. பல்லாயிரக் கணக்கான தமிழ் சொற்களை ஆராய்ந்த தொல் காப்பியர் **"குற்றிய லுகர முறைப் பெயர் மருங்கின்"** (தொல், எழுத்து - 67) என்ற சூத்திரத்தில் நுந்தை (உனது தந்தை) என்ற சொல்லில் மட்டும் மொழி முதல் குற்றியலுகரம் அமைந்துள்ளதாக கூறுவது சொல்லாய்வு இலக்கணமாக இனிக்கிறது.

சூத்திரங்களோடு இலக்கணத்தை சுவைத்துப் படித்தால் இனிக்கும். இலக்கணப்படி செம்மொழியாகிய தமிழ் வளர்ப்போம்.

(தொடரும்.....)

# இலங்கையில் தொடர்ந்து வெளிவரும் சிற்றிதழ்களுக்கு அரச மாநியம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை!

## தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க மாநாட்டில் தீர்மானம்

- தர்மா -

இந்தியாவில் தொடர்ந்து வெளிவரும் சிற்றிதழ்களுக்கு அரசு மாநியம் வழங்குவதைப் போன்று இலங்கையிலும் வெளிவரும் சிற்றிதழ்களுக்கு அரச மானியம் பெற்றுக் கொடுக்க கலாசார அமைச்சுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க 6ஆவது மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உலக தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க 6 ஆவது மாநாடு 5ஆம் நாளில் (5/01/2011) இடம் பெற்றது.

காலையில் இடம் பெற்ற ஆரம்ப நிகழ்வுக்கு உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க இலங்கைக்கிளை தலைவர் பத்மா சோமகாந்தன் தலைமை வகிக்க, தமிழ்த் தொண்டர் புரவலர் ஹாசிம் உமர், பேராசிரியர் சபா ஜெயராசா, டொமினிக் ஜீவா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.




சங்க பொதுச் செயலாளர் கவிஞர் சொர்ணபாரதி ஆண்டறிக்கையைச் சமர்ப்பிக்கிறார்.

கொழும்பு- வெள்ளவத்தை இராம கிருஸ்ணமிஷன் மண்டபத்தில் தை

அதனைத் தொடர்ந்து வரவேற்புரையை சங்கத்தின் இலங்







"தென்றல்" சஞ்சிகை ஆசிரியர் க.கிருபாகரனுக்கு "மணவாளன் இலக்கிய விருது" பேராசிரியர் சபா ஜெயராசா, புரவலர் ஹாசிம் உமர் ஆகியோரால் வழங்கப்படுகிறது.

கைக்கிளை செயலாளர் அந்தனி ஜீவா நிகழ்த்தினார். அத்தோடு தலைமையுரையை இலங்கைக்கிளைத் தலைவர் பத்மா சோமகாந்தனும், சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணனும் விரிவாக விளக்கிக் கூறினர்.

அடுத்ததாக இடம் பெற்ற பொதுக்குழு அமர்வுக்கு சங்கத் தலைவர் வதிலைபிரபா தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் கவிஞர் சொர்ணபாரதி ஆண்டறிக்கையை வாசித்தார். பிற்பகல் வேளையில் மாநாட்டை முன்னிட்டு வெளியிடப்பட்ட செங்கதிர் சிறப்பிதழ் பேராசிரியர் சபா.ஜெயராசா தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாநாட்டில் மூத்தபடைப்பாளருக்கான விருது இந்திய நாவலாசிரியர் கு.சின்னப் பாரதிக்கும், வல்லிக்கண்ணன் இதழியல் விருது (மூத்த இதழாழருக்கான விருது) மல்லிகை சஞ்சிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்கும், அவ்வை இலக்கிய விருது (பெண் படைப்பாளருக்கான விருது) - திருமதி பத்மா சோமகாந்தனுக்கும் வழங்கப்பட்டது.

செங்கதிர் இலக்கிய விருது இந்திய சிற்றிதழ் சேகரிப்பாளர் க.பட்டாபிராமனுக்கும், **"கல் வெட்டு பேசுகிறது இலக்கிய விருது"** சுவைத்திரள் சஞ்சிகை ஆசிரியர் திக்கவயல் தர்மகுலசிங்கத்திற்கும், **"கவிதை உலகம் இலக்கிய விருது"** நீங்களும் எழுதலாம் சஞ்சிகை ஆசிரியர் கவிஞர் எஸ். தனபாலசிங்கத்திற்கும் **"இனிய மணாஇலக்கிய விருது"** படிகள் சஞ்சிகை ஆசிரியருக்கும், கருத வேலி இலக்கிய விருது காந்தியம் சஞ்சிகை ஆசிரியருக்கும், **"மணவாளன் இலக்கிய விருது"**




**சங்க இலங்கைக்கிளை செயலாளர் அந்தனி ஜீவா, பொருளாளர் த. கோபாலகிருஸ்ணன் ஆகியோர் சிற்றிதழ் ஆசிரியர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுகின்றனர்.**

**"தென்றல்"** சஞ்சிகை ஆசிரியர் க.கிருபாகரனுக்கும் **"பரமசிவன் ராமசாமி இலக்கிய விருது"** சிராங்கூன் டைம்ஸ் (சிங்கப்பூர்) இதழுக்கும், **"நாகம்மாள் நினைவு இலக்கிய விருது"** சென்னையைச் சேர்ந்த செங்கரும்பு மாத இதழுக்கும், **"சிகரம் இலக்கிய விருது"** குறளருவி மாத இதழுக்கும் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கை, இந்திய சிற்றிதழாளர்களின் அறிமுக உரைகள் இடம் பெற்றன. இறுதியில் ஜீவநதி சஞ்சிகை ஆசிரியர் பரணிதரன் நன்றியுரையாற்றினார்.

இவ்வாறாக முழுநாள் விழாவாக உலகத்தமிழ்ச் சிற்றிதழ் சங்க 6ஆவது மாநாடு நிறைவுபெற்றது.



**நிகழ்வில் கலந்து கொண்ட சிற்றிதழ் ஆசிரியர்களை படத்தில் காணலாம்.**





# தென்றலின் தேடல்

-க.கிருபாகரன்-

## கலாபூஷணம் மூத்ததம்பி அருளம்பலம்

ஆரையம்பதியைச் சேர்ந்த மூத்ததம்பி அருளம்பலம் (ஆரையூர் அருள்) தொடர்ந்து கலை, இலக்கியத் துறை வளர்ச்சிக்காக புரிந்து கொண்டிருக்கும் பங்களிப்புக்காக இலங்கை அரசாங்கத்தின் கலாசார அமைச்சு அண்மையில் அவருக்கு **"கலாபூஷணம்"** விருது வழங்கிக் கௌரவித்தது.



இவ்வாறு விருது பெற்ற **மூத்ததம்பி அருளம்பலத்தை (ஆரையூர் அருள்) "தென்றல்"** மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறது.

இவர் ஆரையம்பதியில் 1949.09.19 ஆம் நாளில் மூத்ததம்பி - அன்னம்மா தம்பதிகளுக்கு மூன்றாவது புதல்வனாகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மட்/ ஆரையம்பதி இராமகிருஸ்ண வித்தியாலயத்திலும், தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை மட்/ கல்லடி - உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலையிலும் கற்றார்.

தான் கற்ற கல்வியை மாணவச்செல்வங்களுக்கு ஊட்டும் பொருட்டு 1973 ஆம் ஆண்டில் பயிற்றப்பட்ட



**கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் விருதினை ஆரையூர் அருளிடம் கையளிக்கிறார்.**

கணித ஆசிரியரானார். தனது அயராத உழைப்பினால் பிற்காலத்தில் அதிபர் பரீட்சையில் சித்தி பெற்று சில



கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் விருதினை ஆரையூர் அருளிடம் கையளிக்கிறார்.

பாடசாலைகளில் முகாமைத்துவ தகமைசார் அதிபராக பணிபுரிந்தார். இவ்வாறாக தரம் 01 அதிபர் சேவையில் 2009ம் ஆண்டுடன் ஓய்வு பெற்றார்.

## பெற்ற விருதுகள்

**01.** 1997 ஆம் ஆண்டு மண்முனைப் பற்று பிரதேச செயலக சாகித்திய விழாவில் (**"கூத்துக் கலைஞர் அண்ணாவியார்"**) பணப்பரிசு, சான்றிதழ் பெற்றமை.

**02.** 2002ஆம் ஆண்டு புதுக் குடியிருப்பு கண்ணகி மகா வித்தியா லயம் வழங்கிய **"கூத்துக் கலைஞர்"** பட்டம்.

**03.** 2009ஆம் ஆண்டு சமாதான நீதவான்களின் மனித உரிமைகள் அமைப்பு வழங்கிய **"கீர்த்தி சிறி"** (தேசிய விருது)

**04.** அதே ஆண்டில் மண்முனைப் பற்று கலாசாரப் பேரவை நடாத்திய கலைஞர் கௌரவிப்பில் வழங்கிய **"நாட்டுக்கூத்து கலைஞர் விருது"**

**05.** அத்தோடு 2009ம் ஆண்டு ஆரையம்பதி நட்புறவுக் கழகம் வழங்கிய **"கலைஞானி விருது"**

**06.** 2010ஆம் ஆண்டில் கிராமியக் கலைக் காற்றிய சேவைக்காக முதலமைச்சரால் வழங்கப்பட்ட **"முதலமைச்சர் விருது"**

**07.** அதே ஆண்டில் (2010) இலங்கை அரசாங்கத்தின் கலாசார அமைச்சர் ஏ.ஈ. ஏக்கநாயக்காவினால் வழங்கப் பட்ட **"கலாபூஷணம் விருது"**

## இவரின் கவிதைகள் களங்கண்ட இதழ்கள்

**01.** கிழக்கொளி (1992) "பாரதி மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று"








கலாசார அமைச்சர் ஏ.ஈ ஏக்கநாயக்கா விருது வழங்குகின்றார்.

**02.** கிழக்கொளி (1999) **"வித்தகன் விபுலானந்தன்"**

**03.** ஒளி(ஆடி 1996) **" ஒற்றுமைக் கர வொலி ஒலிக்கட்டும்......."**

**04.** **"தமிழ்மணி அன்புமணி"** பாராட்டு விழா சஞ்சிகையில் **"இசைபாட வாருங்கடி எங்கள் அன்புமணி"**

**05.** சிகரம் சஞ்சிகை 2003இல் - **"மண்முனைப் பற்றுச் சிறப்பு"**

**06.** 2009 இல் **"மண்முனைப்பற்றுச் சாகித்திய விழா வெளியீட்டுக்கவி."**

**07.** கதிரவன்சஞ்சிகையில் 2009இல் "மண்முனைப் பற்றுச்சிறப்பு."

**08.** 2010இல் சிறுவர் உரிமைகள் கும்மிப்பாடல்கள்.

## சிறுகதைகள்

**01.** 1986 ஆம் ஆண்டு பட்டிருப்புக் கோட்டமட்டத்தில் **"அவள்"** சிறுகதைக்கு முதல் இடம் கிடைத்தது.

**02.** 1992 ஆம் ஆண்டு மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலகம் நடாத்திய நாடகப் போட்டியில் **"தியாக தீபம்"** சமூக நாடகத்துக்கு முதலிடம் கிடைத்தது.

**03.** 2002 ஆம் ஆண்டு மண் முனைப்பற்றுக் கோட்டமட்டம் நடாத்திய சிறுவர் நாடகப் போட்டியில் **"உண்மை விளங்குது"** சிறுவர் நாடகம் 2ம் பரிசு பெற்றது.

## நாட்டுக் கூத்து

**01.** 1974ஆம் ஆண்டு **"வள்ளி திருமணம்"** வட மோடி நாட்டுக் கூத்து பொலநறுவை முத்துகல் மகாவித்தியா லயத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

**02.** 1981 ஆம் ஆண்டு **"வாலிவதம்"** வடமோடி நாட்டுக்கூத்து இலங்கை வானொலியில் ஒலிபரப்பு செய்யப்பட்டது.

**03.** 1983 ஆம் ஆண்டு பொத்துவில் மெதடிஸ்தமிஷன் வித்தியாலயத்தில் **"பணச்செருக்கு"** வடமோடி நாட்டுக் கூத்து அரங்கேறியது.

**04.** 1992ஆம் ஆண்டு அரங்கேறிய **"வழிதவறிய வஞ்சி"** வடமோடி நவீன நாட்டுக் கூத்து.

**05.** 1993ஆம் ஆண்டு அரங்கேறிய **"அனுமன் கண்ட சீதை"** வடமோடி நாட்டுக்கூத்து

**06.** 1994ஆம் ஆண்டு அரங்கேறிய **"மங்கள தீபம்"** வடமோடி நாட்டுக் கூத்து

**07.** 1997ஆம் ஆண்டில் மண் முனைப்பற்று பிரதேச செயலகம் நடாத்திய தென்மோடிக்கூத்துப் போட்டி யில் **"சுந்தரி விடு தூது"** முதலாம் பரிசு கிடைக்கப்பெற்றது.

இலங்கையின் ஆற்றல் மிக்க - மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய, இசைத் துறைக்கு பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு கொண்டு வரும் வகையிலேயே "**தென்றலின் தேடல்**" எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**08.** அதே ஆண்டில் (1997 இல்) வடக்கு - கிழக்கு மாகாணசபை நடாத்திய தமிழ் மொழித்தினப் போட்டியில் **"சுந்தரி விடு தூது"** தென்மோடிக் கூத்துக்கு முதலாம் பரிசு கிடைத்தது.

**09.** அத்தோடு 1998ம் ஆண்டு **"இரணிய சங்காரம்"** தென்மோடி நாட்டுக்கூத்துக்கு முதலாம் பரிசு கிடைக்கப்பெற்றது.

**10.** 2002ஆம் ஆண்டு மட்டக்களப்பு வலயம் நடாத்திய போட்டியில் **"குருதட் சணை"** வடமோடி நாட்டுக் கூத்துக்கு இரண்டாம் பரிசு கிடைக்கப் பெற்றமை.

### இறுவட்டு வெளியீடு

**01.** 1992ம் ஆண்டு வெளியிடப்பட்ட (ஆரையம்பதி சிவனேஸ்வரர் அலய காவடி, ஊஞ்சல் இறுவட்டு)

**02.** 1993இல் வெளியிடப்பட்ட ஆரையம்பதி கண்ணகி அம்பாள் கும்மி, தாலாட்டு பாடல்கள் இறுவட்டு.

**03.** 1994இல் வெளியிடப்பட்ட ஆரையம்பதி பேச்சியம்பாள், காவடி, கும்மி, தாலாட்டு, கரகம் இறுவட்டு

**04.** 1995ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட செல்வாநகர் காளியம்மன் தாலாட்டு, கும்மி, ஆக்கப்பாடல் இறுவட்டு.

**05.** 1996ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆரையம்பதி வம்மிக்கேணிமாரியம்மாள் கரகம், காவடி, தாலாட்டு , ஆக்கப்பாடல் இறுவட்டு.

**06.** 1997 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கோளாவில் மாரியம்மன் காவடி, கும்மி ஆக்கப்பாடல் இறுவட்டு.

**07.** 2001ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கோளாவில் மாரியம்மன் காவடி, கும்மி இறுவட்டு.

**08.** அத்தோடு (2001இல்) வெளியிடப்பட்ட கல்லடி உப்போடை பேச்சியம்மாள் காவடி, கும்மி, தாலாட்டுப் பக்திப்பாடல் இறுவட்டு.

**09.** 2002ம் ஆண்டு வெளியிடப்பட்ட மஞ்சந் தொடுவாய் வீர பத்திரர் காவியம், புதுக்குடியிருப்பு கண்ணகியம்மாள் காவடி, கும்மி, தாலாட்டு பக்திப்பாடல்கள் இறுவட்டு.

**10.** 2006ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புன்னைச்சோலை காளியம்மாள் காவடி, கும்மி, ஆக்கப்பாடல்கள் அடங்கிய இறுவட்டு.

**11.** 2010ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கல்லடி - உப்போடை பேச்சியம்மாள் காவடி, கும்மி, பக்திப்பாடல்கள் அடங்கிய இறுவட்டு, புத்தகம்.

இவற்றோடு தனது ஆக்கங்களை தேசிய ரீதியாக வாழும் எம் உறவுகளும் அறியும் வகையில் வீரகேசரி, தினக்குரல் , தினகரன் பத்திரிகைகளில் பல்துறை சார்ந்த ஆக்கங்களை எழுதியுள்ளார்.





# வியப்பில் இன்னும்!

ஏறாவூர் தாஹிர்



வாழை இனக் கன்றொன்று
வாலைகட்டி,
வளர்ந்துள்ளதாய்ப் பலர்வாய்
வழங்கக் கேட்டு,
கன்றெங்கு உள்ளதென்ற
இடத்தைத் தேடிச்
சென்றங்கு செவ்வாழை
மரத்தைக் கண்டு......

திடலொன்றின் பக்கத்தில்
சிற்றாற்றோரம்
சிறப்பாக மடல் கட்டி,
குலையும் தட்டி,
நதிக்கரையின் குளுமையிலும்,
இயற்கைப்பசளை
இட்டதிலும் கிராமத்துக்
காற்றும் பட்டு,
பருவத்தையும் மீறிப் பருத்து நின்ற
பாங்கான வாழையதில்
பார்வை முட்ட......

அழகான அடிப்பாகம்
அகத்தை அள்ள,
குலைப்பாரம் தாளாமல்
முன்னால் தள்ள,
இடைப்பாகம் சற்றே முன்
சரிந்த தோற்றம்!
இதயங்களின் துடிப்பில்
வேகம்! மாற்றம்!

காய் முற்றிக் கனியாகக்
குலுங்கும் போது...
கட்டிளமை மெருகேறி
இலங்கும் போது ....
காகங்கள் கனி கொத்த
வரலாம்! மந்தி
முந்தி வரும் அந்த நிலை
வரலாம்!,ஆனால்,
செழிப்பான செவ்வாழைக்
கனியைத் தின்ன,
செண்பகமோ, அணில், கிளியோ
வந்தால் நன்று!

பொருந்தாத துணையொன்று
பொருந்தும் போது,
விருந்தாகும் கனி நிலையோ
நெருஞ்சிக்காடே!
விதி பண்ணும் விளையாட்டை
எண்ணும் வேளை,
விடைகாணா வினாவொன்றே
விடையாய் இன்னும்!



# மட்டக்களப்பு - படுவான் கரையின் பழமையும், பழமைச் சுவடுகளும்.

-க.தங்கேஸ்வரி B.A.[தொல்]-

**15.ஹெனன்னகல (HENANNAGALA) பிராமிக் கல்வெட்டு**

இதுவும் பதுளை - மட்டக்களப்பு வீதியில் 67ம் கட்டைக்கு வடமேற்கில் 6 மைல் தொலைவில் காணப்படும். இம்மலையில் பீலியுடன் குகை காணப்படுகிறது. இலங்கையில் உள்ள குகைகளில் மிகப் பெரியது இது எனக் கருதப்படுகிறது. இங்கு காணப்படும் கல்வெட்டுக்களில் மீன்சின்னம் காணப்படுகிறது. 4ம்நூற்றாண்டில் ரோகணையில் ஆட்சி செய்த கதிர்காமவுத்திரியரின் இலட்சினை மீன் ஆகும். மேலும் கசபநகர, கிரிதிசகாம, விலகம, திசகாம ஆகிய இடப்பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளன. கமனிதிச, மஜிமரஜ ஆகியோரால் வழங்கப்பட்ட, கிரிதிச கிராமமும், கரணிதிச கிராமமும் கூறப்பட்டுள்ளது. விலகம, மலுகம, கசவனக்கா, நொகிபித்த ஆகியனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. பால்குளம் என இன்று பிரதேச மக்களால் வழங்கப்படும் இடம் கிரிதிச கிராமம் எனவும் கொள்ள முடிகிறது.

**16. எரகுல (ERAHULA) பிராமணக் கோயில்**

கி.மு முதலாம் நூற்றாண்டில் இது பிரபல்யம் பெற்று இருந்ததாக மகாவம்சம் மூலம் அறியமுடிகிறது. கலந்த (Kalanda), எரக்காவில (Erakavlla) கோகர்ண ஆகிய இடங்களில் இருந்த மூன்று பிராமணக் கோயிலை மகாசேனன் அழித்தான் என அறியமுடிகிறது. இங்கு பிற்காலத்தில் விகாரைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

**17. நூகம் - சில இடிபாடுகள்**

நூகம் குளத்திற்கு அருகில் ஸ்ரீ மேகவர்ணன் காலத்து (கி.பி. 307) கல்வெட்டு ஒன்று சில எச்சங்களுடன் காணப்பட்டன. இங்குள்ள விகாரையின் பெயர் பியங்குதுகத (Piyankutukata) என்பதாகும். இவ் விகாரை யட்டாளதிச மகாராசாவால் ஸ்தாபிக்கப்பட்டது.கி.பி 5ம் நூற்றாண்டில் ரோகணையில் ஆட்சி செய்த மன்னரும் இக்கல்வெட்டில் வடலக, வணவிட்டிய, சுலுண போன்ற





இடங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. AIC - 24, UCR - Ull No - 4 PP 238.

**18. வெல்லாவெளி பண்டைய குடியேற்றம்**

இது இன்று பட்டிப்பளை பிரதேசத்தில் காணப்பட்டாலும் அவை எல்லாம் படுவான்கரையினையே சேர்ந்தன. மட்டக்களப்பைக் கண்ட மதிசுதன் என்ற அரசன் மண்டூர் முருகன் ஆலயத்திற்கு ஆயிரம் ஆவணக் காணிகள் விளைய ஒரு அணையைக் கட்டினான். அதுதன் மகன் பெயரால் நாதனை எனவும், கோயிலுக்கு வழங்கப்பட்ட வயல்வெளி சித்திர வேலாயுதர்வெளி எனவும். நாமம் சூட்டினான். வேலாயுதர்வெளி மருவி வெல்லாவெளி எனவாயிற்று. வதனமார் ஊர்சுற்றுக் காவியத்தின் படி கன்னிமாரும், வதனமாரும் கும்பகோணம், இராமேஸ்வரம், கந்தளாய், கொட்டியாரம், கிளிவெட்டி, தம்பன்கடவை, தம்பலகாமம், பாணமை, நாவலூர், நாகமுனை, உறுகாமம், என்பவற்றுக்கு கூடாக வந்து வதனாவெளி என்ற இடத்திலும் திருக்கோவில் தம்பட்டையில் இருந்து நாதனையிலும், நாச்சிமார் கல்லடியிலும் தங்கியதாக கூறும் 1816ம் ஆண்டு அமைக்கப்பட்ட அம்மன் கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது.(வதனமார் ஊர் சுற்றுக் காவியம்)

**19. மாவேற்குடா - சோழர் பாரம்பரியம்**

இது பழுகாமத்திற்கு தெற்கே அத்தியா முன்மாரியில் உள்ள இடமாகும். பெரியவேல் ஒன்றினைக் கொண்டிருந்த இக்கோயில் பிள்ளையார் கோயிலாக மாறியுள்ளது. " **கண்டியக் கட்டு" அல்லது "கண்டி அதர்"** எனப்படும். பாதை இதனூடாகவே செல்கிறது. சோழர்கால தொடர்பு என்பதற்கு **"அத்தியாமுன்மாரி"** சான்றாகிறது. முத்தெட்டு, முன்மாரி, இப்பெயர்கள் சோழர் கால ஆதிக்கத்தினை காட்டுகின்றன. பண்டு வேல் வழிபாடு காணப்பட்ட ஒரே இடம் எனவும் கருதலாம்.

**20. சிப்பிமடு தூண்**

சிப்பிமடு எனும் காட்டு பிரதேசத்தில் காணப்பட்ட கல்தூண் ஒன்றிலே நாகம், விசிறி வடிவ உருவம் சில எழுத்துக்களையும் கொண்டதாக இருந்தது. தொல்பொருளியல் திணைக்களத்தலைவர் ஸ்ரீசோம விசிறியும், நாகசிற்பமும் பௌத்தத்திற்கு உரியது என்று கூறினாலும் இது காணப்பட்டது இந்துக்கோயிலின் அயலிலாகும். கிமு 2ம் நூற்றாண்டுக்கு உரியது. எனக்கூறும் இக்கூற்று ஏற்கமுடியாதொன்றாகும். (weekend sunday may 1983)

**21. வழுக்கல் ஆறு, வழுக்கல் குளம் போன்ற இடிபாடுகள்**

தாந்தாமலைக்கு அப்பால் உள்ள வழுக்கல்மலை, வழுக்கல்குளம்,

திவுளான, நாதனை, புழுகுநாவி போன்ற இடங்களெல்லாம் பழமையான இடங்களும் படுவான் கரையின் மேற்குப் புறம் உள்ள இடங்களாகும். புழுகுநாவிக் குளத்தினுள்ளே உள்ள விகாரமலை என்பதிலே கற்படுக்கைகள், கல்வெட்டுக் கள் போன்றன காணப்பட்டன. உகணை, நவகிரி, திக்கோடை, தாந்தாமலை, வம்மியடிஊற்று இவை எல்லாமே பழமையான இடங்களாகும். பண்டைய வயல்வெளிகளையும், குளங் களையும் கொண்ட இடங்களாகும். இவை எல்லாமே பட்டிப்பளை பிரிவு வரமுன்னர் மண்முனை மேற்கு பிரதேச பிரிவிலே இருந்தன.

பண்டு தாண்டவமலை எனப் பட்ட தாந்தாமலையிலும் பல்வேறு எச்சங்கள் காணப்பட்டன. இன்று அவ்எச்சங்கள் எல்லாம் மறைக்கப்பட்டு விட்டாலும் இது வேல் வழிபாடும் வேடர் கலாசாரமும் விளங்கிய இடமாகும். குளக்கோட்டன் ஆடகசவுந்தரியை திருமணம் செய்து இப்பகுதியிலே அரண்மனை அமைத்து ஆண்டான் என மட்டக்களப்பு மான்மியமும் பிற குறிப்புக்களும் கூறுகின்றன.

### 22. நாதனை, அம்பிளாந்துறை, வம்மியடி ஊற்று, போன்ற வன்னி மைகள்

நாதனை, அம்பிளாந்துறை, வம்மியடிஊற்று, நவகிரி, கரவெட்டி போன்ற இடங்கள் தனித்தனி வன்னிமைகளாக இருந்த இடங்களா கும். சுமார் 500 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் இவ்வன்னிமைகளின் கீழ் நிர்வகிக்கப்பட்டதாக மக்கள் கூறுவர். சுருங்கச் சொன்னால் பண்டு நெற்களஞ் சியமாக விளங்கியது படுவான்கரை பிரதேசமே. இப்பிரதேசங்கள் பழமைக்கு இன்றும் இப்பிரதேசத்தில் வாழுகின்ற வேட்டுவ இன மக்களே சான்றாகும்.

### 23. படுவான்கரை இராட்சியமும் - பொலநறுவை இராட்சியமும்

நீண்ட காலப்பாரம்பரியம் உடைய படுவான்கரை பிரதேசத்திலே பலகாலத்து பலமன்னர்களது நாணயங் கள் பல இடங்களிலும் எடுக்கப் பட்டுள்ளன. கொத்தியாபுலையைச் சேர்ந்த சிவகுரு வட்ட விதானையார் 43 பழைய நாணயங்களை கச்சேரி அரும்பொருட் காட்சியகத்திற்கு வழங்கி யுள்ளார். இப்பிரதேசங்கள் அனைத்தி லும் ஆதிக் குடிகளான அதித்திராவிடர் வாழ்ந்தமைக்கு இவைகள் சான்றாகின் றன. பொலநறுவை இராட்சியத்துடன் கொண்டிருந்த தொடர்புகளுக்கும் சான்றாகின்றன.

### 24. முள்ளாமுனை - வாழைச் சேனையில் சில இடிபாடுகள்

வவுணதீவு பிரதேசத்திலிருந்து சுமார் இரண்டு மைல்களுக்கு அப்பால் முள்ளாமுனையில் இருந்து வயல்வெளி ஊடாக வடக்கே சென்றால் வாழைச்





சேனை என்னுமிடத்திலே தனியார் வயல் ஒன்றில் இடிபாடுகள் நிரம்பிக் காணப்படுகின்றன. இங்கு கற்தூண்கள், தூண்களைப் பொருத்தும் கற்குழிகள், தூணின் அடிப்பகுதியில் வழமைக்கு மாறான தட்டை ஓடுகள், நீர்ப்பாசன குழாய் போன்றன பரவலாக காணப் படுகின்றன. இவற்றில் சில கச்சேரியில் அரும்பொருட்காட்சியில் வைக்கப்பட் டுள்ளன. சுமார் 3 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள இப்பிரதேசம் மாளிகையாகவோ வசிப்பிடமாகவோ இருந்ததற்கு அடையா ளமாகும்.

### 25. புளியடிமடுவில் சில எச்சங்கள்.

இன்று காளி கோயில் அமை யப்பெற்றுக் காணப்படும் இந்த இடம் பண்டு மனிதர்கள் வாழ்ந்த இடம் என்பது தெளிவு. இக்கோயிலை சுத்த மாக்கும் போது இவ்விடத்திலே பல நாணயங்கள். வெண்கல செம்புகள் என்பன கிடைத்ததாகவும் அவை காலஞ் சென்ற குஞ்சித்தம்பி- பரமானந்தம் என்பவர் வைத்திருந்ததாகவும் அறிய முடிந்தது. கிணறு வெட்டும் போதும் பழைய நாணயங்கள் நிறைய கிடைக்கப்பெற்றதாகவும் அறிய முடிகிறது. இவ்விதமே கரவெட்டி காளி கோயில் வெட்டயச்சேனை பிள்ளையார் கோயில் என்பன பழமையானவை எனவும் இவை சோழர் காலத்தவை எனவும் அறிய முடிகிறது. கிடைக்கப் பெற்ற அனைத்தும் பொலனறு வைக்கால நாணயங்களுடனும். பொலநறுவை இராட்சியத்துடனும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டி ருந்ததை இது காட்டுகிறது. ஸ்ரீ தம்மா சோக்க தேவா, ஸ்ரீமச்சகசமல்ல, ஸ்ரீராஜலீலாவதி, ஸ்ரீ புவனேகபாகு போன்ற பொலநறுவை மன்னர்களால் வெளியிடப்பட்ட இந்த நாணயங்கள் மூலம் மட்டக்களப்பு படுவான்கரைக்கும், பொலனறுவை இராட்சியத்திற்கும் கண்டி இராட்சியத்திற்கும் இடையே இருந்த தொடர்பை உணர முடிகின்றது. பொல நறுவைப் பிரதேசத் தில் குழப்பம் ஏற்படும் போது அம்மன்னர்கள் ஒழிந்து கொள்ள தஞ்சமளிக்கும் இடமாகவும் படுவான் கரை காணப்பட்டது. கிழக்குப்பிரதேச மான உறுகுணை இராட்சியத்திலும் இவ்விதமே ஒளிந்து கொண்டனர். சோழ, பாண்டிய படையெடுப்புகள் ஏற்பட்ட போதும் உறுகுணை இராட்சியமே ஒளிந்து கொள்ளும் இடமாக இருந்தது.

### 26. கலிங்க மாகோனும் படுவான் கரையும்

பொலநறுவையைத் தலை நகராகக் கொண்டு கலிங்க மாகோன் 44 வருடங்கள் ஆட்சி செய்த போது மட்டக்களப்பு மன்னர்கள் பொலநறுவை இராச்சியத்துடன் நெருங்கிய தொடர்பி னைக் கொண்டிருந்தனர். கலிங்க மாகோன் காலத்தில் பங்குடாவெளி, மகிழவெட்டுவான், பழுகாமம், மண்டூர், போரதீவு போன்ற இடங்கள் பிரபல்யம்

பெற்றிருந்தன. கொத்தியாபுலை என இன்று வழங்கப்படும் இடம் பண்டு கொத்தனார் துறை எனப்பட்டது. மண்முனை இராட்சியத்திற்குப் பொருட் கள் கொண்டு செல்லும் துறையாகவும் இது இருந்திருக்கின்றது. கல், மரம், போன்றன படுவான்கரையில் இருந்து இத்துறை முகம் ஊடாக கொண்டு போயிருக்க வேண்டும். கொத்தனார்கள் வேலை செய்த இடம் என்பதற்கு இப்பிரதேசத்தில் காணப்படும் இடிபாடுகள் சான்றாகும்.

இப்பிரதேசத்தின் பல இடங்களி லும், பண்டைய இடிபாடுகளும், ஐந்து தலை நாக புடைப்புச்சிற்பமும், கைபிடிச்சு வரும், பல பழைய நாணயங்களும், தெய்வ உருவங்களும் தொன்மைக்கு சான்றாவதோடு. இப்பிரதேசத்தினை பார்த்தவுடனே விளங்கும். பண்டைய மண்முனை இராட்சியத்திற்குட்பட்ட இடமாகவே இப்பிரதேசம் இருந்தது.

## 27. படுவான்கரை முக்குவதேசமாகும்.

முழு மட்டக்களப்புமே ஒரு கால கட்டத்தில் முக்குவதேசம் என வழங்கப் பட்டது. முற்காலத்தில் ஆதித்திராவிடர் இயக்கர்.நாகர். வேடர் என்போரும் பிற்காலத்தில் கலிங்கர். சிங்கர், வங்கர், கம்மாளர். வேளாளர். முக்குவர் என் போரும் மட்டக்களப்பு பிரதேசத்தில் வாழ்ந்து ஆட்சி செலுத்தி யுள்ளனர். முக்குவர் என்போர், ஏறாவூர் தொடக்கம் மண்டூர் வரை பெரும் பான்மை இனமாகவும் ஆட்சி செலுத்திய இனமாகவும் வாழ்ந்துள்ளனர். மட்டக்களப்பு பிரதேசம் முழுவதும் முக்குவதேசம் என வழங்கப்பட்டது. இன்றும் கூட முக்குவ இன மக்களே மட்டக்களப்பு பிரதேசம் முழுவதும் பரந்து வாழ்கின்றனர்.

இம்முக்குவ இன மக்கள்

1. குகன் குலத்தவர்.
2. முகுளி நாகர் வழி வந்தவர்.
3. வன்னியர்.
4. சேர நாட்டிலிருந்து வந்தவர்.
5. கலிங்க படையாட்சி குலம்.

என பலவிதமாக இவர்களது சிறப்பு கூறப்படுகின்றது. எது எப்படி இருப்பினும் வன்னியர் என்போர் மலைவாசிகள் படைக்கலப் பயிற்சி பெற்றவர்கள் என அர்த்தசாஸ்திரம் கூறும். தொண்டை மண்டலத்து ஆதிக்குடிகளான குறும்பர். வேடர், வன்னியர் எனக் கூறப்படுகிறது. போரில் ஒருவன் தீரச்செயல் புரிந்தால் வன்னியர் என்ற பட்டத்தைப் பெற்றான். பல்லவர் படையில் குறும்பர், இருளர், முதியோர், பயிற்சி பெற்று **"வன்னியர்"** என்ற பட்டத்துடன் இருந்தனர். சோழப் பேரரசின் வேலைக்காரப் படையின் வன்னியர் என்ற சிறப்புப் பெயர் பெற்றார்.

பாண்டியர் காலத்தில் பெரும் படை என்ற சேனை வன்னியர் எனப்பட்டனர். கலிங்கப்பேரரசின் **கீழ்**





வன்னியர் இருந்தனர். கிழக்கில் கலிங்கமாகோன் வன்னியர்களைக் குடியமர்த்தினான். கிழக்கில் குளக்கோட்டன் வன்னியர்களைக் குடியேற்றினான்.

முக்குவர் என்போர் படையாட்சி வன்னியர் என பேரறிஞர் ஆய்வாளர் சேதுராமன் கருதுகின்றார். இவர்கள் சேரநாட்டிலிருந்து வந்தவர்கள். மலபார்(மலையாளம்) பிரதேசத் திலிருந்து படைவீரர்களாக இங்கு வந்தனர். சேரநாட்டிலே மலபார் பகுதியில் **"முக்குவர்"** என்ற சாதியினர் இன்றும் உள்ளனர். சோழன் காலத்தில் தெரிந்த கைக்கோளப் படையினர் வசித்த இடத்தை கலிங்கர் ஆட்சி காலத்தில் இம்முக்குவரினர் வசித்தனர். மட்டக்களப்புப் பிரதேசத்தில் கலிங்கத் தொடர்பானது பல நூற்றாண் டுகளாக தொடர்ந்து வந்துள்ளது. எனினும் உலகநாச்சி வருகையுடன் கலிங்க வர லாற்றில் எழுத்தாதாரங்களு டன் காணப்பட்டது. கலிங்கமாகோன் காலத்தில் மண்முனை இராட்சியம் முக்கியத்துவமும், சிறப்பும் பெற்றது. இவனுடன் வந்த போர்வீரர்கள் கேரள(மலையாள) வீரர்கள் என மகாவம்சம் கூறுகின்றது. நல்லியற் கோடர் என்ற சேரமன்னன் முக்குவன் எனப்படுகின்றான். எனவே படுவான் கரைப் பிரதேசமானது முக்குவர்காலம் வாழ்வும் வளமும் பெற்றது.

## 28. இம்முக்குவ குடிகளின் விபரம் பின்வருமாறு:-

அ) பூர்வீக குடிகள் வழி வந்த ஆதித்திராவிடர்.

ஆ) ஆதித்திராவிடர் வழிவந்த இயக்கர். நாகர்

இ) இயக்கர், நாகர் வழி வந்த வேடர்

ஈ) வேடர்கள் கரையோரங்களில் குடியேறி கலப்புற்றோர்.

உ) மலையாளத்தில் இருந்து வந்த பிரிவினர்.

ஊ) உள்நாட்டில் ஏற்கனவே வாழ்ந்தோர்.

ஆகவே முக்குவர் என்போர் கேரளாவில் வாழ்ந்த மலைச்சாதியினர் போன்றோராகும். இவர்களே படுவான் கரை எனப்படும் மண்முனை மேற்கு, தெற்கு பிரதேசங்களில் வாழும் மக்களாகும். இவர்கள் ஆதித்திராவிடர் வழி வந்த நாகர்களின் வாரிசுகள் என்பதற்கும், கேரள மலைச்சாதியினரில் இருந்து அவ்வப்போது வந்தவர்கள் என்பதற்கும் இன்றும் படுவான்கரை பிரதேசங்களில் நிலைத்து நிற்கும் பாரம் பரியங்கள், சாதிவழமை, குடிஉரிமை கள், தாய்வழிச்சமுதாயம், திருமண நடைமுறைகள், குழந்தை பிறப்பு தொடக்கம் மரணம் வரையிலான சடங்கு முறைகள் , சம்பிரதாயங்கள், உணவு வகைகள், வயற்கள நடை முறைகள், கோயிற் சடங்குகள் போன்ற பல நடைமுறைகள் சான்றாகின்றன.

-தொடரும்-

# இரத்தவிதி

- கன்னிமுத்து வெல்லபதியான் -

இது இனங்களால்
எழுதப்பட்ட விதி...
ஈழத்தமிழருக்கென்றே
எழுதப்பட்ட
சிறப்பு விதி...
ஓ... இது இரத்தவிதி?

சமாதானத்தை
எதிர்பார்க்கிறார்கள்
சனங்கள்...
சனங்களை
எதிர்பார்க்கின்றன
சவப்பெட்டிகள்?

இது தான்
இங்குள்ள விதி
பாவப்பட்ட
மனங்களுக்குக்
கிடைத்த பரிசு...?

மாறாததும்
மாற்றியமைக்க
முடியாததும் போல
மாறிப்போன – இரத்த
விதியிதனை
இனியெப்படி
மாற்றி அமைப்பதோ...?

முடிவிலியான
விதி இதன் பின்னால்
முடிவிலிகளாகவே
முயற்சிகளும்...
இரத்தினதீவம்
இதனால்
இரத்தத் தீவாகவே
காட்சி தருகிறது
தினமும்...

சமாதானம் என்பது
சவப்பெட்டியில் தானா
எனக் கேட்கிறது
மனமும்...

இது இனங்களால்
எழுதப்பட்ட விதி...
ஈழத் தமிழருக்கென்றே
எழுதப்பட்ட
சிறப்பு விதி...
ஓ... இது இரத்த விதி...





# புதிய வரவுகள்



**நூல்** : தேனகம்
**நூலின் வகை** : மண்முனை வடக்கு பிரதேச கலைஞர் விபரத் திரட்டு.
**வெளியீடு** : மண்முனை வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், மட்டக்களப்பு.

இந்நூலில் வாழ்த்துச்செய்தி, அணிந்துரை, வெளியீட்டுரை போன்றவற்றுடன் மண்முனை வடக்கு பிரதேச செயலக எல்லையினுள் வதியும் முக்கியஸ்தர்களை வகைப்படுத்தி ஆவண மயப்படுத்தியுள்ளனர்.

இவை ஆய்வு, ஆக்க இலக்கியம், நாடகத்துறை, கூத்து, இசைத்துறை, நடனத்துறை, வாத்தியம்,ஓவியத்துறை, சிற்பத்துறை, ஊடகத்துறை, ஏனைய துறை எனப் பல்வேறு வகைகளில் பிரிக்கப்பட்டுள்ளன.

எதிர்கால ஆய்வுத்துறைக்கு உசாத்துணை நூலாக தேனகம் கலைஞர் விபரத்திரட்டு அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

---



**நூல்** : நானிலம்
**நூலின் வகை** : கலாசார விழா சிறப்பு மலர்.
**வெளியீடு** : கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், ஏறாவூர் பற்று, செங்கலடி.

இந்நூலில் வாழ்த்துச் செய்திகள், கலாசார கீதம், ஏறாவூர்ப்பற்று பண்பாட்டினைப் பிரதி பலிக்கும் விடுகதைகள்,கிழக்கு மாகாண தொழிலாளர்களிடையே வழங்கும் அம்மாப்பாடல்கள், கடவுள் எங்கே?(சிறுகதை), கலைஞர் கௌரவிப்பு விபரம் போன்ற பல்வேறு விடயங்களைத் தாங்கி இவ்வாண்டும் புதுப்பொலிவுடன் வெளிவந்துள்ளது.

71 பக்கங்களில் அழகிய வர்ண அட்டைப்படத்துடன் வெளிவந்துள்ளது நானிலம் சிறப்பு மலர்.

# கொள்ளி

வனா



**"அப்பா நீங்க என்ன பாவம் செய்தனீங்கப்பா. உங்களுக்கு கொள்ளி வைக்க ஒரு ஆம்புளைப் புள்ளய பெறாமப் போயிட்டீங்களே அப்பா. என்ன கொடுமையப்பா இது? என்ன அவலம் அப்பா இது? ஏனப்பா இப்படி?" ஏனப்பா?"**

பூபாலசிங்கத்தாரின் சடலம் வெளி வாசலுக்கு கொணரப்பட்டு வண்டியில் ஏற்றப்பட்ட போது அவரது இளைய மகள் மாலதி வீரிட்டழுதது என்னை ஒரு கணம் ஸ்தம்பிக்கச் செய்தது.

பூபாலசிங்கத்தாரின் இறந்த நேரம் முதல், இப்போது அவர் இறுதிப்பயணத்திற்கு புறப்படுகிறாரே இந்த இறுதி நேரம் வரை கொள்ளி வைக்க ஆண்பிள்ளை ஒன்றை ஒருவனைத் தேடிக்களைத்த அவலம் நிறைந்த சோகம், பலருக்குத் தெரியாது. அதனால் அவர்களுக்கு இந்த அவலம் சாதாரணமாகப்பட்டிருக்கலாம். என்னால் இதனைச் சாதாரணமாக எடுக்க முடியவில்லை. கடந்த காலங்கள் என் நினைவுக்கு வந்தன.

நானும் பூபாலசிங்கத்தாரும் நெருங்கிய நண்பர்கள்: இருவரும் ஒரே அலுவலகத்தில் பணி புரிந்தவர்கள். இருவரது வீட்டு விசேஷங்கள், கஷ்டங்கள் அனைத்திலும் ஒருவர் வீட்டில் மற்றவராக ஒன்றாகப் பங்கு கொண்டு வாழ்ந்தவர்கள். பூபாலசிங்கத்தாருக்கு நான்கு பெண்





பிள்ளைகள். அனைவரும் திருமணம் முடித்து நன்றாக வாழ்கிறார்கள். மூத்தவள் சுமித்திரா கனடாவில், இரண்டாமவள் பிரவாகினி அவுஸ்திரேலியாவில், மூன்றாவது மகள் செல்வி களுத்துறையில். பெற்றோருக்குத் தெரியாமல் திருமணம் செய்ததால் உறவு விட்டுப் போனவள். இளையவள் மாலதி கொழும்பில்.

பதின்மூன்று நாட்களாக பூபாலசிங்கம் படுத்த படுக்கையாக இருந்தார். வைத்தியர்கள் கைவிரித்து விட்டார்கள். இரத்த அழுத்தமும் நீரிழிவும் கைகோர்த்து அவரை மரண வாயிலில் கொணர்ந்து நிறுத்தியிருந்தன. மக்கள் எல்லோருக்கும் பத்து நாட்களுக்கு முன்பே அறிவித்தாயிற்று.

தனது பிள்ளைகளையும் கணவனையும் காரணம் காட்டிய சுமித்திரா, தன்னால் வர முடியாது என்றும் சாச் செலவுக்குப்பணம் அனுப்புவதாயும் அறிவித்து விட்டாள். செல்வியின் நிலை கிணற்றில் போட்ட கல்.

**"ஏதும் என்றால் அறிவியுங்கோ. அப்ப வாறன்" என்று மாலதி அறிவித்திருந்தாள்.**

பூபாலசிங்கத்தாருக்கு நினைவு தப்பிய மூன்றாவது நாள் பிரவாகினி வந்து சேர்ந்திருந்தாள் தனியே.

பூபாலசிங்கத்தார் படுக்கையில் விழுந்ததிலிருந்து அந்த வீட்டிற்கு அடிக்கடி ஓடி வந்து கொண்டிருந்த எனக்கு அந்த வீட்டு நிலவரங்கள் அத்துப்படி.

நான்கும் பெண்குழந்தைகள் என்று வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி சிறுகச் சிறுகச் சேமித்து நகரப் பாடசாலைகளில் படிப்பித்து பார்த்துப் பார்த்து வளர்த்தார். பிள்ளைகளுக்கு நோய் நொடி என்றால் துடித்துப் போவார். வீட்டில் பார்க்க மனைவியிருந்தும் அவள் சொல்லியும் கேட்காமல் லீவு எடுத்து மக்களுக்கு அருகிலேயே விழித்திருப்பார். ஆண்பிள்ளை இல்லையென்ற குறை தெரியாதபடி நான்கு பெண்களையும் மிகவும் துணிச்சலும், விவேகமும், சாதுரியமும் உள்ளவர்களாக அவர் வளர்த்த சங்கதி அனைவருக்கும் தெரியும்.

என்ன இருந்தும் என்ன? அவரது மரணத் தறுவாயில் ஒரு பிள்ளையாவது அவரை நினைவு தப்புமுன் வந்து பார்க்கவில்லை என்ற குறை பூபாலசிங்கத்தாரின் மனைவி பார்வதியம்மாளுக்கு இருந்தது.

இறப்பு நெருங்கியதை அறிந்ததிலிருந்து **'கொள்ளி'** வைக்கும் பிரச்சினை தொடங்கிவிட்டது. மக்கள் - மருமக்கள் - பேரப்பிள்ளைகள் என்று எல்லோரும் வந்துவிடுவார்கள்.

எனவே விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கை பார்வதியம்மாளுக்கு இருந்தது. அதுவும் கைகூடவில்லை. மாலதியும் தனது கணவன் அவரது தாய்க்கு **'கொள்ளி'** வைக்க வேண்டியிருப்பதால் அப்பாவுக்குச் செய்ய முடியாது என **'விளக்கி'**னாள். பார்வதியம்மாளின் சகோதரிக்கு மூன்று ஆண் மக்கள் இருந்தார்கள். ஒருவனின் மனைவி கர்ப்பமாம். அதனால் முடியாது என்று கூற, மற்றவனுக்கும் ஏதோ **'துடக்கு'**ச் சாட்டு வர அடுத்தவனும் நழுவிவிட அந்த நம்பிக்கையிலும் மண் விழுந்தது.

**"ஆம்பிளைய நம்பித் தானா இந்த உலகம். பொம்பிளையளத் தானே அவர் பெற்றவர். அவங்கள்ள ஒருத்தி கொள்ளி வைக்கட்டுமே."**

நிலைமையின் சிக்கலைச் சமாளிக்க அஞ்சலி வாய் திறந்தாள். **"இது என்னடாப்பா உலகத்தில இல்லாத வழக்கம், ஆரது இந்த யோசனை சொன்னது?"** செல்லாச்சிக்கிழவி வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்குவர. அஞ்சலி சொன்னாள்.

**"பின்ன என்ன ஆச்சி? இங்க நிலைமையைப் பாத்தா வயிறு கொதிக்குது. வெளியூர்களில் சில சமயம் பொம்பிளையளும் சவக் காலைக்குப் போய் இந்தச்சடங்கு செய்யிறவ. இப்பெல்லாம் நிலைமை மாறி வருகுது"** அவளைத் தொடர்ந்து பேச எவரும் அனுமதிக்கவில்லை. எனவே மீண்டும் தொடங்கிய இடத்திற்கே **'கொள்ளிப் பிரச்சினை"** வந்து சேர்ந்தது.

இந்தச் சடங்குகளின் தாற்பரியங்களில் மனித உறவுகளின் விரிசல்களையும் எனக்குள்ளேயே சிந்தித்துக் கொண்டேன். என்ன உலகமடா இது? பிணத்தை ஒழுங்காக அடக்கம் பண்ணவோ, எரிக்கவோ முடியாதபடி அவலம். சடங்குகள் மீது எனக்கு கோபமும், ஆத்திரமும் வந்தது. ஆண் பிள்ளை ஒன்றுக்காய் சாவீடே அல்லோல கல்லோலப்பட நான் மனம் வெதும்பிப் போனேன்.

இந்த வேளையில் **'தொண்டு'** நோக்கில் ஒருவன் முன் வந்தான். செல்லாச்சிக் கிழவியும், முத்துத்தாயாரும் அவனை ஆதியோடு அந்தமாய் விசாரித்து தம் சாதிக்கு ஒத்துவராதவன் என்று கஷ்டப்பட்டுக் கண்டு பிடித்து அவனையும் நிராகரித்து விட்டார்கள்.

நேரம் நான்கை நெருங்கிக் கொண்டிருந்தது. அறிவித்தலின்படி இறுதிக் கிரியைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.






எங்கிருந்தோ திடீர் என்று உறவொன்றைக் கண்டுபிடித்து 'முறையானவனெனக் கொணர்ந்து நிறுத்தினார்கள். அவனுக்குத் தாய் தந்தை தற்போதில்லை. திருமணமாகாததால் பிச்சல் பிடுங்கல் இல்லை. முறையோ இல்லையோ நேரத்துக்குப் பூபாலசிங்கம் வழியனுப்பப்பட வேண்டுமென்பதில் பலர் குறியாயிருந்ததால் செல்லாச்சிக் கிழவிக்கு விசாரணை செய்ய அவகாசம் இல்லாமற் போய் விட்டது. என்றாலும் **'நாலுபேரிடம்'** விசாரித்து **'மகன்'** முறை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட திருப்தி அவளுக்கு.

இதோ **"திடீர்ப்பிள்ளை"** கொள்ளிக் குடத்தோடு முன்னே செல்ல பூபாலசிங்கம் இறுதிப்பயணம் புறப்பட்டு விட்டார்.

அப்போதுதான் அந்த அலறல்...... மாலதியின் வெப்பிசாரம் வார்த்தைகளாய் வெடித்தது.

**"அப்பா நீங்கள் என்ன பாவம் செய்தனீங்கப்பா ........ உங்களுக்கு கொள்ளி வைக்க ஒரு ஆம்புளப் பிள்ளைய பெறாமப் போயிட்டீங்களே அப்பா, என்ன கொடுமையப்பா இது? என்ன அவலம் அப்பா இது? ஏனப்பா இப்படி? அப்பா?"**

பார்வதி அம்மாளுக்கு தனது இறுதிக் கண ஞாபகம் வந்தது. தனக்கு இப்படி நேருமோ...? மேலே அவளால் சிந்திக்க முடியவில்லை. நினைவு தப்பிச் சரியும் அவளைப் பக்கத்தில் **"யாரோ"** தாங்கிக் கொண்டார்கள்.



# அஞ்சலி !

**14.02.2011 அன்று பெரிய கல்லாற்றில் காலமான முன்னாள் அதிபரும், மூத்த படைப்பாளருமான பண்டிதர் தமிழ் ஒளி சீனித்தம்பி தம்பிராசாவுக்கு "தென்றல்" இன் அஞ்சலி!**

**அன்னை மடியில் – 02.02.1924**
**மண்ணின் மடியில் – 14.02.2011**

**தென்றல்**
**குறுக்கெழுத்துப் போட்டி**
**இல. - 03 இல் வெற்றி**
**பெற்றோர்**

**முதலாம் இடம்**
ச.சர்வஜன்
வாகரையார் வீதி
களுதாவளை.

**இரண்டாம் இடம்**
மா.விஜேந்திரா
ஈச்சந்தீவு, கன்னன்குடா
பலநோக்குக்
கூட்டுறவுச்சங்கம்.
வவுணதீவு.

**மூன்றாம் இடம்**
D.நிஷாந்தன்
ஈச்சந்தீவு - கன்னன்குடா
பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்
வவுணதீவு

**குறுக்கெழுத்துப் போட்டி - 03**
**இற்கான விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மா | 2 மி | ■ | 3 ப | 4 ய | ம் |
| 5 தா | ர | 6 கை | ■ | சே | ■ |
| ■ | 7 ட் | நா | 8 ய | டி | ம் |
| 9 வ | சி | ட் | ட | ர் | ■ |
| டு | ■ | 10 டு | ம் | ■ | 11 உ |
| 12 கு | டி | ■ | 13 த | ரு | மி |

## தென்றலின் பார்வையில்



மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்திய முத்தமிழ் விழாவில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா முன்னாள் வடக்கு – கிழக்கு மாகாண கலாசார உதவிப் பணிப்பாளர் எஸ்.எதிர்மனசிங்கத்துக்கு "தேனகச் சுடர் விருது" வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.





# "தென்றல்" குறுக்கெழுத்துப் போட்டி இல - 04

இரா.தவராஜா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | ■ | 3 |
| 4 | | ■ | ■ | 5 | |
| 6 | | 7 | | ■ | |
| 8 | | | ■ | 9 | |
| | ■ | 10 | | | |
| | ■ | | ■ | | ■ |

**இடமிருந்து வலம்**

01. மட்டக்களப்புக்கு பெருமை சேர்ப்பது.
04. மன்மதனின் மனைவி.
05. எழுத்தறிவிப்பவன்.
06. எதற்கும் இதை போட்டுச் செய்வது நல்லது.
08. பூமி
09. இது தானாக வளர்வது. (மாறிக்கிடக்கிறது)
10. சிநேகிதன். (குழம்பிக் கிடக்கிறது)

**மேலிருந்து கீழ்**

01. புரட்சிக் கவிஞர்.
02. களவு (குழம்பிக் கிடக்கிறது)
03. உபசரிப்புக்குரியவர்.
07. அணிகளின் கூட்டு. (குழம்பிக் கிடக்கிறது)
09. உறவுகளில் ஒன்று (தலைகீழ்)

* விடைகளை இங்கு வெளியாகியுள்ள கூப்பனில் எழுதிக் கத்தரித்து, தபால் அட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும்.
* தபால் உறைக்குள் வைத்து அனுப்பப்படும் கூப்பன் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
* முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக 300/, 200/-, 100/- வழங்கப்படும்.
* போட்டி முடிவுத்திகதி 15.06.2011
* விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :-

**"தென்றல்" குறுக்கெழுத்துப்**
**போட்டி இல.04**
**34/1. பழைய கல்முனை வீதி,**
**கல்லடி,**
**மட்டக்களப்பு.**














# படமும் – பதிவும்

## விராதன் வதை

- ரவிப்ரியா -

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெருமை காக்கும் பாரம்பரிய கலைகளில் கூத்தே முதன்மை பெறுகின்றது.

இன்னும் அதன் மகத்துவமும் மகிமையும் மங்காமல் புதிய பாணியில் பேணப்பட்டு வருவது வரவேற்கக் கூடிய விடயமாகும்.

கலரி அமைத்து விடிய விடிய கண்விழித்து கூத்துக்கலையை ரசித்த அன்றைய நிலை மாறி குறுங்கூத்து என்ற புதிய வடிவம் பெற்று வருகின்றது.

இந்நிலையில் கூத்து கலையானது எமது பிரதேசங்களை விட்டு விடுபட்டுப் போகவில்லை. என்பது ஆறுதல் தரும் விடயமாகும்.

இன்று தொலைக்காட்சிகளில் மெகா தொடர்கள் ஆக்கிரமிப்பு செய்கின்றன. அன்று உண்மையில் கூத்துக்களே மக்களின் அங்கீகாரத்துடன் நல்ல செய்திகளை மக்களுக்கு உணர்த்துவதற்காக, ஒரே நாள் "மெகா" தொடராக கூத்துக்கள் அரங்கேறின.



முன்பு கூத்துக்கலையில் பங்கேற்றவர்களின் கதாபாத்திரப் பெயர்களே அவர்களை அடையாளப்படுத்துவதாகவும், பெருமை சேர்ப்பதாகவும் நிலைத்திருந்தன.

அந்தளவிற்கு சமூகத்தில் கூத்துக்கலை செல்வாக்குச் செலுத்தியிருந்ததோடு, மரியாதைக்குரிய கலையாகவும் மதிக்கப்பட்டது என்பதையும் மறுதலிக்க முடியாது.

இத்தகைய அரிய கலையை அரவணைத்துச் செல்லும் நிலை தற்போது துளிர்விட்டு வருவது துல்லியமாக தெரிகின்றது.



மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுவானும் சரி, படுவானும் சரி, பாரம்பரிய கலைகளை வளர்ப்பதிலும் பாதுகாப்பதிலும் சம பங்கு வகிக்கின்றன.

அந்த வகையில் மண்முனை தென் எருவில்பற்று கலாசார பேரவையின் கலாசார விழா **"விராதன் வதை"** என்னும் குறுங்கூத்தை விசேடமாக அரங்கேற்றி ரசிகர்களை குதூகலிக்கச் செய்தது.

**"விராதன் வதை"** - எருவிலைச் சேர்ந்த பிரபல அண்ணாவியாரும், கலாபூஷணமுமான வீ.இராசமாணிக்கம் அவர்களின் கைவண்ணத்தில் உருவான குறுங்கூத்தாகும்.

பரீட்சார்த்தமாக குறுங்கூத்துக்களை அரங்கேற்றி அறிமுகப்படுத்தியதன் மூலம், இவர் அதன் முன்னோடியாகத் திகழ்கின்றார். அதில் அவர் தொடர்ந்து வெற்றிகளையே குவித்து வருகின்றார்.

வான்மீகி இராஜாஜி இராமாயணத்தை அடியொற்றி, அதில் வரும் விராதன் என்னும் பாத்திரத்தைத் தேர்ந்தெடுத்து, முப்பது நிமிடங்களுக்குள் அந்தப் பாத்திரத்தை முழுமையாக எம்முன் வைக்கின்றார்.

இராமாயணத்தில் நடைபெறும் முதலாவது போரை அப்பாத்திரத்தின் மூலம் எமது கண்முன் கச்சிதமாக மேடையில் நிலைநிறுத்தும் அவரது பாணியும், இயக்கமும், பாடல்களும், முயற்சியும் ரசிகர்களுக்கு முகமலர்ச்சியை ஏற்படுத்தியது.

கைகேயி தசரதனிடம் இரு வரம் கேட்கின்றாள். ஒன்று இராமனின் பட்டாபிஷேகத்தைத் தவிர்த்து, பரதனுக்கு பட்டாபிஷேகம் செய்வது. மற்றது இராமன் பதினான்கு வருடங்கள் வனவாசம் செல்வது.

வனவாசம் செல்லும் இராமன் பிரமனிடம் விசேட வரம் பெற்ற விராதன் என்னும் காட்டரக்கனை கானகத்தில் எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது.







சீதையை ஒப்படைத்துவிட்டு உயிர் தப்பிச் செல்லுமாறு விராதன் கர்ஜிக்கின்றான். இராமனும் இலட்சுமணனும் இணைந்து அவனுடன் மோதுகின்றனர்.

உணர்வு பூர்வமான கூத்துப் பாடல்கள் உள்ளத்தை தொடுகின்றன. உக்கிரமான போர் தாளக்கட்டு தப்பாமல் மேள வாத்தியத்தின் உதவியுடன் மட்டும் களை கட்டுகின்றது.

கதா பாத்திரங்கள் (ராமன், லட்சுமணன், சீதை, விராகன்) நவரசங்களும் வெளிப்பட களைக்காமல் கச்சிதமாக எம் கண்ணுக்குள் நிற்கின்றன.

இதில் இடம் பெறும் மோதல் காட்சிகள், முன்பு திரைப்படங்களுக்குச் செய்யப்படும் **"மயிர்க்கூச் செறியும் சண்டைக்காட்சிகள்"** என்பதை நிஜமாகவே நினைவூட்டுகின்றன.

இத்தகைய சண்டைக் காட்சிகளை பழக்கிய அண்ணாவியார் இளைஞர் அல்ல. அப்படியிருந்தும், எவ்வாறு இந்தச் சண்டைக் காட்சிகளைப் பழக்கினார் என்பது வியப்பிற்குரியது.

அத்துடன் இந்த குறுங்கூத்தின் மூலம் சமூகத்திற்கு நல்லதொரு செய்தியையும் முன்வைக்கின்றார். அது உலக நாடுகளுக்கும் பொருந்தும். அதர்மம் நிலையற்றது. தர்மமே நிலையானது என்பதாகவும். அத்துடன் கூத்தின் இறுதிக்கட்டத்தில் விராதன் மீது அனுதாபம் கொள்ளுமளவிற்கு உருக்கமாக பாடல்கள் உருவாக்கியமை திறமையின் வெளிப்பாடே. இத்தகைய அண்ணாவியாரை மேடையில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் எஸ்.அருள்ராசா பொன்னாடை போர்த்தி விசேடமாக கௌரவித்தமை மிகவும் பொருத்தமானதும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதுமாகும்.

படங்கள் உதவி -
**AVC** போட்டோ, கல்லாறு

# கலைகளுக்கெல்லாம் அரசு கவிதை

- ஆ.மு.சி.வேலழகன்-

குன்றக் குறவன்
சாயலன் மடமகள்

குன் - நேர், றக் - நேர் = தேமா.
குற - நிரை, வன் - நேர், = புளிமா.
சா - நேர், யலள் - நிரை = கூவிளம்
மட - நிரை, மகள்- நிரை = கருவிளம்

இந்த ஈரசைச்சீர்களான தேமா, புளிமா, கூவிளம், கருவிளம் ஆகியவை அகவல் என்னும் ஒரு வகைப்பாட்டுக்குரியவையாம். ஆதலால் இவற்றை **"அகவற்சீர்"** என்பராம். அகவலுக்கு மற்றொரு பெயர் **"ஆசிரியம்"** என்பதாம். எனவே இச்சீர்களை **"ஆசிரிய உரிச்சீர்"** என்றும் சொல்வராம்.

பொதுவாக மாவில் முடியும் சீர்களை **"மாச்சீர்"** என்றும், விளத்தில் முடியும் சீர்களை **"விளச்சீர்"** என்றும் கூறுவதுண்டாம்.

**"ஈரசை நாற்சீர் அகவற்கு உரிய**
**தேமா, புளிமா, கூவிளம், கருவிளம் சீர் அகவற்கு, ஆம்."**
**- யா.காரிகை -**

## மூவசைச்சீர் எட்டு

மேற்கூறிய ஈரசைச்சீர்கள் நான்கின் இறுதியிலும் நேரசை சேர்ந்து வருமாம். மூவசைச்சீர் நான்கும் நிரையசை சேர்ந்து வருமாம். மூவசைச் சீர் நான்கும், ஆக மூவசைச்சீர்கள் எட்டு அவை:

அ.) ஈரசையோடு நேர்சேரின் காய் என்பது சேரும்.

நேர் நேர் நேர் = தேமாங்காய்.
நிரை நேர் நேர் = புளிமாங்காய்.
நேர் நிரை நேர் = கூவிளங்காய்
நிரை நிரை நேர் = கருவிளங்காய்





இவை நான்கும் **"வெண்பா"** என்னும் ஒருவகைப் பாட்டுக்குரிய சீர்களாகும். ஆதலால் இவற்றை **"வெண்பா உரிச்சீர்"** எனவும் கூறுவராம். காய் என்னும் வாய்பாட்டில் முடிவதால் இவற்றைக் காய்ச்சீர் எனலாமாம்.

கவை யாகிக் = நிரை நேர் நேர் = புளிமாங்காய்.
கொம்பாகிக் = நேர் நேர் நேர் = தேமாங்காய்
காட்டகத்தே = நேர் நிரை நேர் = கூவிளங்காய்
சபைநடுவே = நிரை நிரை நேர் = கருவிளங்காய்.
கடைகாய் அடையின் வெண்பாவிற்கு ஆம்
**- யா.காரிகை -**

(ஆ.) ஈரசையுடன் நிரைசேரின் கனி என்பது சேரும்.

நேர் நேர் நிரை = தேமாங்கனி.
நிரை நேர் நிரை = புளிமாங்கனி
நேர் நிரை நிரை = கூவிளங்கனி
நிரை நிரை நிரை = கருவிளங்கனி

இவை **"வஞ்சிப்பா"** என்னும் ஒருவகை பாட்டில் மட்டும் வருமாம். ஆதலால் இவற்றை **"வஞ்சியுரிச்சீ"** என்பராம். கனியில் முடிவதால் இவற்றைக் **"கனிச்சீர்"** என்றும் கூறுவராம். கனிச்சீர் வெண்பாவில் வராதாம்.

பூந்தா மரை = நேர் நேர் நிரை = தேமாங்கனி.
வினைக்கம்பலை = நிரை நேர் நிரை = புளிமாங்கனி.
தேம்புனலிடை = நேர் நிரை நிரை = கூவிளங்கனி
மனைச்சிலம்பவும் = நிரை நிரை நிரை = கருவிளங்கனி.

**"அந்தம் கனியா வகுத்த, வஞ்சிக்கு உரிச்சீர்"**
**- யா.காரிகை -**

உலகிலே தோன்றிய உயிரினம், மரம், புல், பூண்டு போன்ற எண்ணற்ற அனைத்தினதும் அவதார உண்மையினை (தத்துவத்தை) கவிதைக்காட்சியிலே சற்றுப்பார்த்து விட்டு கவிதை என்றால் என்ன? எனும் தொடருக்கு வருவோம்.

உலகின் அனைத்து நாடுகளிலும், ஞானிகள், அறிஞர்கள் பிறந்திருக்கிறார்கள். சாதாரணமாக உலகில் காண்கின்ற காட்சிகளை பொருட்களை, நம்மைப்போன்ற சாதாரணமக்கள் காண்கின்ற காட்சிகளுக்கு, பொருட்களுக்குப்பின்னால் வேறொரு காட்சி, பொருள் உண்டென்பதை உணர்ந்தவர்கள், கண்டவர்கள் இந்த ஞானிகள், அறிஞர்கள் தான்.

பல ஆயிரம் வருடங்களுக்கு முன் நம்மவர்கள் இந்த உண்மையை நேரில்கண்டு அனுபவித்திருக்கிறார்கள். மேல் நாட்டு அறிவியல் கலைகளும்

தற்காலத்தில் எவ்வளவோ வேறுபட்டிருந்தாலும் கல்லோ, புல்லோ, மனிதனோ எல்லாம் சுமார் தொண்ணூறு வகைப்பட்ட அணுக்களாலேயே ஆக்கப்பட்டிருக்கின்றன. அணுவை ஆராய்ந்து பார்த்தால், அதுவும் அதிநுட்பமான எண்ணிறைந்த துகள்களால் ஆக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவருமாம்.

இந்தத் துகள்களில் அவ்வளவாக வேறுபாடு ஒன்றும் இல்லையாம். ஆகவே எல்லாப் பொருட்களும் அடிப்படையாகப் பார்க்கும் போது ஒன்றுதான். இந்தப்பேதமற்ற பொருள் இங்குண்டு அங்கில்லை என்று சொல்ல முடியாதபடி எங்கும் வியாபித்ததாய் உள்ளதாம்.

இந்த விடயத்தை கம்பர் பாடிய கவி ஒன்று எப்படிக்காட்சிப்படுத்துகிறது பாருங்கள்:- இரணியன் என்பவன் தன்னிடத்தில் உள்ள பொன், பொருள் போன்ற அனைத்தினாலுமே தான் எல்லாச் செயல்களும் நடக்கின்றன. இந்தச் செல்வங்களை மீறி கடவுள் ஒன்றினால் எதுவும் நடக்கவில்லை. அனைத்தினையும், இந்தச் செல்வங்களைக் கொண்டு தானே செய்வதாகக் கூறுகிறான்.

இதற்கு மாறாக அவனுடைய மகன் பிரகலாதனோ, பிறவியிலேயே ஞானி. அவன் தன் தந்தை இரணியனைப்பார்த்து எல்லாப் பொருள்களிலும், எல்லாச் செயல்களிலுமே கடவுள் ஒருவன்தான் இருக்கிறான். என்ற விதமாகப் பேசுகிறான்.

ஒருசாண் இடத்திலும் இருக்கிறான் கடவுள். கட்டடத்துக்குச் செங்கல்போல, சிருஷ்டிப் பொருள்களுக்கு அடிப்படையாயுள்ள ஒற்றைத்தன்மை வாய்ந்த அணுவில் மாத்திரமல்ல; அதை நூறு பாகமாக (சதகூறாகப்) பிரித்தால் அந்தப்பாகத்திலும் (கோணிலும்) அவன் இருக்கிறான்.

**"சாணினும் உளன், ஓர்தன்மை**
**அணுவினைச் சதகூறிட்ட**
**கோணினும் உளன் மாமேருக்**
**குன்றினும் உளன் இந்நின்ற**
**தூணினும் உளன்."**

எனப்பக்கத்தில் நின்ற தூணைச்சுட்டிக்காட்டினானாம் மகன் பிரகலாதனன். ஆனால் அதனோடு மட்டும் நிற்காமல் தந்தை இரணியனிடத்திலே கடவுள் நின்று விளையாடுகிறான். கடவுள் ஒருவன் கிடையாது என்று இரணியன் சொன்னபோது, அப்படி அவன் சொன்னதும் கடவுள் சொன்னதுதான் என்று உறுதியாகப் பிரகலாதன் சொல்லுவதாக.

**"இந்நின்ற**
**தூணினும் உளன், நீ சொன்ன**
**சொல்லினும் உளன் இத்தன்மை**
**காணுதி விரைவின் என்றான்."**





இப்படிப்பிரகலாதன் சொன்னதும், சிரிப்பையும், சினத்தையும் உண்டாக்கியதாம் இரணியனுக்கு,

ஆம்! உலகில் உள்ள அனைத்தும் அணுக்களினாலே சிருஷ்டிக்கப்பட்டுள்ளன என்ற உண்மையை பன் நெடுங்காலங்களுக்கு முன்னே நம்மவர் கண்டதனை அருமையான கவிதையில் கம்பன் காட்டிய காட்சியைக் கண்டு ரசித்தோம்.

இதனை எழுதக்காரணம் நமக்கு கவிதையை உளமாரப் படித்து அனுபவித்து மகிழும் மனப்பக்குவம் வரவேண்டும், வளரவேண்டும் என்பதற்காக. நாம் கவிஞராகா விட்டாலும் எம்மவர் ஆக்கி எமக்களித்த அந்த அரும் பெரும் செல்வங்களாம் கவிதைகளையாவது படித்துஇன்புறுவோம்.

இனி கவிதை என்றால் என்ன? எனும் விடயத்திற்கு வருவோம்.

**நாலசைச்சீர்**

நாலசைச் சீர்களைப் பின்வரும் வஞ்சிப்பா அடிகளில் காணலாமாம்:-

**"அள் ளற் பள் ளத் தகன் சோ ணாட்டு**
**வேங் கை வா யின் வியங் குன் றூ ரான்"**

அள் / ளற் / பள் / ளத்
நேர் / நேர் / நேர் / நேர்
தகன் / சோ / ணாட் / டு
நிரை / நேர் / நேர் / நேர்
வேங் / கை / வா / யின்
நேர் / நேர் / நேர் / நேர்
வியங் / குன் / றூ / ரான்
நிரை / நேர் / நேர் / நேர்

முன்னர் நாம் கண்டதும், படித்ததுமான மூவசைச்சீர் எட்டின் இறுதியிலும் நேரசையும் நிரையசையும் தனித்தனி அடுத்து வருவன நாலசைச்சீர்களாகும். அவை பதினொன்றாகும்.

காய்ச்சீர் நான்கோடு நேரசை அமைந்து வருவதனால் அவற்றை **"தண்பூ"** என்ற வாய்பாட்டால் அமையுமாம்.

நேர் + நேர் + நேர் + நேர் - தேமாந்தண்பூ
நிரை + நேர் + நேர் + நேர் - புளிமாந்தண்பூ
நிரை + நிரை + நேர் + நேர் - கருவிளந்தண்பூ
நேர் + நிரை + நேர் + நேர் - கூவிளந்தண்பூ

எ.கா :-

தே / மாந் / தண் / பூ
நேர் + நேர் + நேர் + நேர்
புளி / மாந் / தண் / பூ
நிரை + நேர் + நேர் + நேர்
கரு / விளந் / தண் / பூ
நிரை + நிரை + நேர் + நேர்
கூ / விளந் / தண் / பூ
நேர் + நிரை + நேர் + நேர்

இனிவரும் கனிச்சீர்நான்கோடும் நிரை அமைந்து வருவதனால் அவற்றை **"நறும்பூ"** என்ற வாய்ப்பாட்டால் அமையுமாம்.

நேர் + நேர் + நிரை + நேர் - தேமாநறும்பூ
நிரை + நேர் + நிரை + நேர் - புளிமாநறும்பூ
நிரை + நிரை + நிரை + நேர் - கருவிளம்நறும்பூ
நேர் + நிரை + நிரை + நேர் - கூவிளம்நறும்பூ

எ.கா :-

தே / மா / நறும் / பூ
நேர் + நேர் + நிரை + நேர்
புளி / மா / நறும் / பூ
நிரை + நேர் + நிரை + நேர்
கரு / விளம் / நறும் / பூ
நிரை + நிரை + நிரை + நேர்
கூ / விளம் / நறும் / பூ
நேர் + நிரை + நிரை + நேர்

காய்ச்சீர் நான்கோடும் நிரை அமைந்து வருவதனால் இதனை **"தண்ணிழல்"** என்ற வாய்பாட்டால் அமையுமாம்.

நேர் + நேர் + நேர் + நிரை - தேமாந்தண்ணிழல்
நிரை + நேர் + நேர் + நிரை - புளிமாந்தண்ணிழல்
நிரை + நிரை + நேர் + நிரை - கருவிளந்தண்ணிழல்
நேர் + நிரை + நேர் + நிரை - கூவிளந்தண்ணிழல்

எ.கா :-

தே / மாந் / தண் / ணிழல்
நேர் + நேர் + நேர் + நிரை





புளி / மாந் / தண் / ணிழல்
நிரை + நேர் + நேர் + நிரை
கரு / விளந் / தண் / ணிழல்
நிரை + நிரை + நேர் + நிரை
கூ / விளந் / தண் / ணிழல்
நேர் + நிரை + நேர் + நிரை

கனிச்சீர் நான்கோடும் நிரை அமைந்து வந்ததனால் இவற்றை **"நறுநிழல்"** என்ற வாய்ப்பாட்டினுள் அமையுமாம்.

நேர் + நேர் + நிரை + நிரை - தேமா நறுநிழல்
நிரை + நேர் + நிரை + நிரை - புளிமா நறுநிழல்
நிரை + நிரை + நிரை + நிரை - கருவிள நறுநிழல்
நேர் + நிரை + நிரை + நிரை - கூவிளநறுநிழல்

எ.கா :-

தே / மா / நறு / நிழல்
நேர் + நேர் + நிரை + நிரை
புளி / மா / நறு / நிழல்
நிரை + நேர் + நிரை + நிரை
கரு / விள / நறு / நிழல்
நிரை + நிரை + நிரை + நிரை
கூ / விள / நறு / நிழல்
நேர் + நிரை + நிரை + நிரை

இவை கலிப்பாவிற்கும், அகவற்பாவிற்குள்ளும் பெரும்பாலும் குற்றியலுகரம் வந்தவிடத்து வரலாமாம். இது போல் வஞ்சிப்பாவினுள்ளும் வருமாம்.

சரி ஓரசைச்சீர் முதல் நான்கசைச்சீர்கள் வரை அசைகளை எவ்வாறு எழுத்துக்களை இனங்கண்டு நேரசை, நிரையசை என்பனவற்றை பிரித்து அறியலாம் என்பவற்றை மேலே பார்த்தோம். ஏனையவைகளை அடுத்தடுத்து வரும் தென்றலில் எதிர்பார்ப்போம்.

**-தொடரும்-**

எதிர்பார்க்கிறது!
பிரதேச மட்டத்தில் இடம்பெறும் கலை, கலாசார, சமய நிகழ்வுகளை வெளிப்படுத்தும் புகைப்படங்களை அனுப்பிவையுங்கள். **"தென்றல்"** அவற்றை நிட்சயம் வெளிக்கொணரும்.
(ஆ–ர்)

# மாணவர்களே! சிறுகதை எழுதுவோம் வாருங்கள்!

- பேராசிரியர். செ.யோகராசா -

சிறுகதை உலகினுள் பிரவேசித்துள்ள இளந்தலைமுறை எழுத்தாளர்களாயினும் சரி அல்லது **'இனியாவது எழுத வேண்டும்'** என்று எண்ணுபவர்களும் சரி எதிர்கொள்கின்ற முக்கியமான பிரச்சினை, எதனை எழுத வேண்டுமென்று தெரியாமல் இடர்படுவ தாகும். இன்னொரு விதமாகக் கூறின், சிறுகதைக்கான **'கரு'**வைத் தேடி அலைபவர்களாக அவர்களுள் பலர் காணப்படுவது வெளிப்படையானது!

கால ஓட்டத்தில் முதிர்ச்சியுடையவர்களாக மேற்கூறிய எழுத்தாளர்கள் மாறுகின்றபோது, சிறுகதைக்கான கரு என்பது எங்கும் - எதிலும் - எல்லோரிலும் எல்லாச் செயல்களிலும் இருப்பதை உணர்ந்து கொள்வர். உதாரணமாக **'காலடி'**யிலே கூட **'கரு'** இருக்கலாம்! **'காலடி'** என்கின்ற போது நேரடி அர்த்தத்தினை மனங்கொள்வோமாயின் செருப்புக்கூட சிறந்த சிறுகதைகளைத் தரமுடியும். ஈழத்தின் சிறந்த படைப்பாளிகளுள் ஒருவரான ஐ.சாந்தன் செருப்பினை வைத்துக் கொண்டு மூன்றோ, நான்கோ சிறுகதைகள் எழுதியிருந்தார். அதில் ஒன்றை மட்டும் உதாரணமாக கூறுகின்றேன். இரு நண்பர்கள் நீண்ட காலத்தின் பின் சந்திக்கின்றார்கள். அவர்களுள் ஒருவன் வெளிநாடு சென்று திரும்பி வந்தவன். மற்றவன் தனது ஊரிலேயே வாழ்பவன். இருவரும் வீட்டுப்படலையடியில் நின்று கதைக்கிறார்கள். வெளிநாட்டு நண்பன் இங்குள்ள நண்பனது சுகசேமங்களை விசாரிக்கிறான். தான் நன்றாக இருப்பதாக இங்குள்ள நண்பன் கூறுகிறான். கதைத்து முடித்துத் திரும்பும் போது வெளிநாட்டு நண்பன் இங்குள்ள நண்பனது கால்களைக் கவனிக்கின்றான். பத்து வருடத்திற்கு முற்பட்ட அதே செருப்பை நண்பன் இப்போதும் அணிந்திருக்கக் காண்கிறான். சிறுகதை முடிகின்றது!

மேற்கூறியவாறு செருப்பிலே சிறுகதையைக் காண்பதென்பது இலகுவான காரியமன்று! எளிமையான - அர்த்தமுள்ள - கவிதைகளை எழுதுவது மிகக்கடினம் என்பர்.

(உ+ம்) : **"இனி யொரு விதி செய்வோம் அதை எந்நாளும் காத்திடுவோம்"** (பாரதி) இவ்வாறு தான் காலடியில் கருவைக் காண்பது! இது யாருக்குச் சித்திக்கும் என்றால், எப்போதும் தியானம் செய்பவர்களுக்கு மட்டுமே. அதாவது எழுதவேண்டுமென்று உண்மையான தாகம் உள்ளவர்களுக்கு மட்டுமே அது இயலும். அவ்வாறு தியான நிலையில் இருந்தாலே தான் எதிலும், எங்கும் சடுதியாக ஒரு கரு வெளிப்படும்! இவ்வேளை **"கவிஞன் கண்டாலே கவிதை,.........."** என்ற கண்ணதாசன் பாடலடி சிலருக்கு நினைவு வரலாம்; நிர்வாணமாக ஆடிய ஆர்க்குமிடீஸின் நினைவும் வரலாம். இளவரசனான மகன் ஒரு ஏழைப் பெண்ணைக் காதலித்த போது - அவனது தந்தை அப்பெண் அழகில்லாதவள் என்று கேலி செய்த போது - **"அவளை எனது கண்கொண்டு பாருங்கள்"** என்று தந்தைக்குக் கூறிய மகனான ஒரு இளவரசனது (மஜ்னு?) நினைவு சிலருக்கு வரலாம்!.

எழுத வேண்டுமென்ற தியானம் ஒரு உயர்ந்த நிலையில் இருப்பதும் அவசியமானது! அதாவது எமது எழுத்திற்கு ஒரு சமூகநோக்கு வேண்டும் அல்லது ஒரு செய்தி எமது உளத்திலே வெளிப்பட வேண்டும் என்ற சிந்தனையும் எமது குருதியில் கலந்திருக்குமாயின் அச்சிறுகதை உன்னதமாக உருவாகும். ஓர் உதாரணம் கூறுகின்றேன். ஒரு தடவை ஓர் ஆசிரியர் சுரண்டல் ரிக்கெற்றை வாங்கிச் சுரண்டும் காட்சி ஒன்றை பஸ்ஸில் போன போது நான் கண்டேன். அது எனது மனதில் பதிந்துவிட்டது. பின்னர் சில மணித்தியாலயங்களுக்குப் பிறகு அந்த ஆசிரியர் தனது மகளுக்கு சில மாதங்களுக்கு முன்னர் திருமணம் செய்து வைத்தது எனது நினைவிற்கு வந்தது! ஒரு அழகான சிறுகதை பிறந்தது! அதாவது, மகளது திருமணத்திற்கு அவ்வாசிரியர் பெருங்கடன் பட்டிருக்கலாம் என்பது எனது

தியானத்தின் உன்னதமான பயனாயிற்று!

மேற்கூறிய சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு வேறுசில கற்பனைக்கதை நாம் செய்ய முடியும்! சுரண்டல் ரிக்கெற் எடுக்கவரும் மனிதரது செயல்கள் அல்லது தோற்றம் என்பது பற்றியோ, விற்பவனது வாழ்க்கை நிலை பற்றியோ ஓர் ஆசிரியர் அந்த ரிக்கெற் எடுக்கிறாரே என்றோ பலவாறு நாம் சிந்திக்கலாம்!

இவ்வேளை இன்னொரு முக்கிய விடயத்தையும் குறிப்பிடல் வேண்டும். பல இளம் எழுத்தாளர்கள், சுரண்டல் ரிக்கெற் தொடர்பாக நான் மேலே குறிப்பிட்ட எல்லா விடயங்களையும் இணைத்து ஒரு சிறுகதையாக எழுதுகின்ற அவல நிலையும் பெரும்பாலும் நடைபெற்றுவிடுகிறது! அதாவது அவர்கள் எழுதுகின்ற ஒரு சிறுகதையில் ஒன்றிற்கு மேற்பட்ட கரு இருப்பதாக அவர்கள் உணர்வதில்லை. ஏதோ ஒன்றை மட்டும் கவனத்திற் குட்படுத்தி எழுதுவதான முதிர் நிலையை எய்தவேண்டிய அவசியம் அவர்களைக் காத்துக் கொண்டிருக்கின்றதென்பது மனங் கொள்ளப்பட வேண்டியதவசியம்!

சிறுகதைக்கான கரு ஒன்று முன்னைய சிறுகதையொன்றினை வாசித்திருந்த அனுபவத்திலிருந்து ஊற்றெடுக்கவும் முடியுமென்பதனை இளம் எழுத்தாளர்கள் அறிந்திருப்பதும் பயனுடையது! குறிப்பிட்ட சிறுகதையை தழுவி எழுதுவதென்பது அதன் அர்த்தமன்று. **"அன்ரன் செக்கோ என்ற எழுதுவினைஞரின் மரணம்"** (Death of a Clerk) என்றொரு சிறுகதை இவ் வேளை நினைவிற்கு வருகின்றது. அடிக்கடி விக்கல் எடுக்கின்ற எழுது வினைஞனொருவன் ஒரு நாள் அலுவலகத்தில் அதனை எண்ணி அடிக்கடி துயர்பட்டு (மேலதிகாரியின் மனம் நொந்திருக்குமெனக் கவலைப்பட்டு) இறுதியில் இறந்து விடுகின்றான்! இது எனது மனத்தினுள் ஊறியிருந்தது. எனது நண்பர் ஒருவர் பலத்துத்தும்முவது வழக்கம்; **"எழுதுவினைஞனின் மரணம்"** சிறுகதையின் அருட்டுணர் வினால் எனது நண்ப னின் தும்மலை வைத்து நான் சிறு கதையை உருவாக்கினேன். இதுபற்றி சிறுகதைப் பயிற்சிப் பட்டறையில் கூறியபோது எனது மாணவி இன்னொரு சிறுகதை உருவாக்கினாள். அன்ரன் செக்கோவின் **"பச்சோந்தி"** என்ற பிரசித்தமான சிறுகதை சாதிப்பிரச்சினைபற்றி





சிறுகதை ஒன்றினைச் சிருஷ்டிக்க வழிகாட்டியது! **"பச்சோந்தி"** சிறுகதையில் ஒருவனை நாய் கடித்து விடுகிறது! கடிவாங்கியவன் பணக்காரன் என்று கருதிய போது அந்நாய் பிச்சைக்காரனது நாயாக தென்படுகிறது! பின்னர் அந்நாய் பணக்கார வீட்டுநாய் என்று கருதப்பட்ட போது அவன் பிச்சைக்காரன் போலத் தென்படுகின்றான்.! இச்சிறுகதை எவ்வாறு சாதிப்பிரச்சினை பற்றிக் கூறுகின்ற சிறுகதை உருவாக வாய்ப்பளித்தது! ஒரு கோழியை கார் அடித்துவிடும். கார்ச்சாரதி ஒரு தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவன் என்று கருதும் போது கோழியில் தவறு தெரியவில்லை. அவன் உயர்சாதி என்று கருதிய நிலையில் கோழி வளர்ப்போர் ஏச்சிற்குள்ளாகின்றனர்!

பழைய இதிகாச, புராணக் கதைகளை புதிய கண்ணோட்டத்திலே அணுகுவதனூடாகவும் புதிய சிறுகதைக்கான கருபிறக்க வாய்ப்புள்ளது. இராமாயண அகல்யையை வைத்து புதுமைப்பித்தன் சிறுகதைகளை எழுதியுள்ளான். அவனது! அகல்யை உளவியல் நோக்கில் உருவானது. **"சாபவிமோசனம்"** பண்பாடு பற்றிய விமர்சன நோக்கில் உருவானது. அகலியை ஏறத்தாழ 30 படைப்பாளர்களது (சிறுகதை ஆசிரியர்கள் கவிஞர்களுட்பட) படைப்புகளுக்கு வழிகாட்டியிருந்தது. இவற்றுள் பல! அகல்யை! என்ற பெயரில் கம்பன் கழக வெளியீடாக வந்துள்ளது!

மிருகங்கள், மனிதர்களை உறவாட வைத்துச் சிறுகதை எழுதலாம். (உ+ம்) தாட்சாயணி பூனையை வைத்து எழுதியதொரு சிறுகதை; மிருகங்களை மட்டும் வைத்தும் எழுதலாம். மு.சிவலிங்கம் நாயையும் அதன் குட்டிகளையும் வைத்து நல்ல சிறுகதை ஒன்றை எழுதியுள்ளார்.

நாம் சந்திக்கும் மனிதர்களை உற்று நோக்கும் போது அவர்களும் சிறுகதைப்பொருளாகலாம். ஒரு தடவை இரவு பஸ்வண்டியில் எனது இருப்பிடம் செல்ல இயலாமல் (அப்போது நெருக்கடிக் காலம்; யேசு பஸ்; இரவு 11 மணிக்கு கொழும்பு சென்ற நிலையில் பஸ்சினுள் படுத்திருந்தேன்) இருந்த வேளையில் ஒருவர் பஸ் கதவைத் தட்டினார். எல்லோருக்கும் பயம் தலைதூக்கியது. அவரோ ஒரு தமிழர். வெளிமடையிலிருந்து **'மன்னன்"** சினிமா படப்பெட்டியை

கல்லடி சாந்தி தியேட்டருக்கு அனுப்ப கொண்டு வந்தார். அவரது ஆசை அடுத்த நாள் அது சாந்தி தியேட்டரில் ஓடவேண்டுமென்பது. பஸ் சாரதி ஏசிவிட்டுத் துரத்திவிட்டார். விடியற் காலையில் மீண்டும் அவர் வந்தார். அந்த மனிதனை வைத்து - சூழலை வைத்து- பல சிறுகதைகள் உருவாக்க முடியும். நான் ஏளனத் தொனியில் அந்த ஏழை இளைஞனது குணஇயல்பு பற்றி ஒரு சிறுகதையைச் சிருஷ்டித்தேன். **'மன்னன்'** என்ற தலைப்பினை ஏளன உணர்வு வெளிப் பட இட்டிருந்தேன்; இன்றைய இளைஞனது அபிலாஷை எனது சிறுகதைக் கருவாயிற்று!

ஆக, கரு எங்கும் - எதிலும் - எவரிலும் - எப்போதும் வெளிப்படும் என்பதனை நாம் உணர வேண்டும். அத்தகைய உணர்வுநிலை, எழுத வேண்டுமென்ற இடையறாத ஆர்வம் சுடர் விட்டுக் கொண்டிருந்தால் மட்டுமே கைகூடும்! அதற்கு அடித்தளங்களாக அன்றாட அனுபவங்கள், கூர்மையான அவதானிப்புகள், தீவிர வாசிப்பு, இடையறாது சிந்தித்தல், கற்பனை வளம் முதலியன அமைய வேண்டும்!

**(தொடரும்)**

## வாசகர் நெஞ்சம்

கிழக்கிலங்கையின் கலாசாரப் பாரம்பரியங்கள் எவ்வாறு? எவரெவரால் பேணப்பட்டு, பாதுகாத்து, வளர்த்தெடுக்கப்பட்டு வந்துள்ளன என்பதை ***"தென்றல்"*** மூலமாக அறிய முடிகிறது.

அத்தோடு ஒரு சாகியத்தின் வரலாற்றுத் தரவுகளையும் நம்மவர்கள் அறிய ஊன்று கோலாகவும் உள்ளது. இத்தகைய ***"தென்றலை"*** வளர்க்க வேண்டிய கடப்பாடு எமது சமூகத்துக்கு உரியது. ***"தென்றல்"*** மேலும் பல்லாண்டு காலம் நிலைத்திருக்க எனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**முல்லை வீரக்குட்டி**
**தம்பிலுவில்**




தென்றல் (சித்திரை – ஆனி) 2011

# "பற் சுகாதாரம் ஒரு பொதுச் சுகாதாரமாகும்"

### வாய்ச் சுகாதாரம் எனப்படுவது யாது?

வாய்ச் சுகாதாரம் ஒரு நபரை பேச, சாப்பிட மற்றும் நோயில்லாமல் அசௌகரியம் இல்லாமல் அல்லது தயக்கமில்லாமல் சமூகத்துடன் வாழவைக்கக் கூடிய அத்துடன் முக அழகைப் பேணக்கூடிய ஒன்றாகும். வாழ்க்கையின் தரத்தோடு ஒன்றிய வாய்ச் சுகாதாரம் அடிப்படைச் சுகாதாரமாகும். இது மனிதனின் உடல் நிலையை பாதிக்கக் கூடிய ஒன்றாகும்.



வாய்ச் சுகாதாரமானது ஆரோக்கியமான பற்களுக்கு அப்பாற் பட்டதாகும். அது சுகாதாரமான முரசு, வாய்க் குழியிலுள்ள ஏனைய பாகங்கள், அரைப்பதற்கு உதவும் தசைகள், அன்னம், நாக்கு, உதடுகள், உமிழ் நீர்ச்சுரப்பிகள் என்பவையும் நோயில்லாமல் இருப்பதைக் குறிக்கும்.

**(தொடரும்)**

### உங்கள் பிள்ளையின் பற்களைப் பராமரிக்கும் முறைகள்

- எப்பொழுதும் இரவு படுக்கைக்குச் செல்லும் முன்னரும், காலை உணவுக்குப் பின்னரும், பல் துலக்க வேண்டும்.
- குறைந்தது 8 நிமிடமாவது சரியான முறையில் பல்துலக்கவும்.

  எப்பொழுதும் புளோரைட் அடங்கியுள்ள பற்பசையினைப் பாவிக்கவும்.
- பற்தூரிகை வாங்கும்போது சிறிய தலை கொண்ட, மெல்லிய தும்புகளாகக் கொண்ட பற்தூரிகையைத் தெரிவு செய்யவும்.
- இனிப்புப் பண்டங்களை சாப்பிடுவதை குறைத்துக் கொள்ள வேண்டும். அல்லது பிரதான உணவுக்குப் பின்னர் மட்டும் உண்பது விரும்பத்தக்கது.

# தரம் - 5 புலமைபரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கான முன்னோடி வழிகாட்டல் பயிற்சி பரீட்சை -2011.


பெயர்:- .............................................. நேரம் :- 45நிமிடம்.

ஆசிரியர் :- யோ.இ.ஞானரெட்ணம்

**பகுதி I**


இல 1-2 வரை தரப்பட்டுள்ள படங்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

1. A B C D



I. Aயும் Bயும் II. Bயும் Cயும் III. Aயும் Cயும் IV. Bயும்Dயும்

2. A B C D



I. Aயும் Cயும் II. Bயும் Dயும் III. Cயும் Dயும் IV. Aயும்Dயும்

இல 3-6 வரை தரப்பட்டுள்ள வினாக்களிலுள்ள விடயங்களுக்குப் பொருத்தமான விடையின் இலக்கத்தினை தெரிந்து அடைப்புக்குள் எழுதுக.

3. சந்தையொன்றில் அதிகமாக காணப்படுவது.
   I. மரக்கறிவகைகள் II. பழவகைகள் III. மீன்வகைகள் (...........)

4. கற்றலில் அதிக ஆர்வம் காட்டுபவர்கள்.
   I. பெற்றோர்கள் II. ஆசிரியர்கள் III. மாணவர்கள் (...........)


5. பூவில் இருப்பது மணம். அன்னையில் இருப்பது பாசம்; எனில் மணியில் இருப்பது
   I. இரும்பு II. ஓசை III. கயிறு IV. முத்து (...........)


6. நாயிடம் இருப்பது மோப்பசக்தி; மானிடம் இருப்பது பயந்த சுபாவம் எனில் நரியிடம் இருப்பது.
   I. தந்திரம் II. உற்சாகம் III. குள்ளத்தனம் IV. நான்கு கால்கள்(...........)





இல 7-8 வரை தரப்பட்டுள்ள வினாக்களிலுள்ள உருவில் அடுத்துவரும் உருவைக்காட்டும் விடையின் கீழ் கோடிடுக.

7. 

8. 

| A தொகுதி | B தொகுதி | C தொகுதி | D தொகுதி |
|---|---|---|---|
| 1, 4, 6, 9,10,15 | 2, 5, 7, 25, 36, 4 | 1, 3, 6, 7, 8, 16 | 16, 9, 4, 1, 25, 18 |

9. மேலே தரப்பட்டுள்ள இலக்க தொகுதியில் அதிக சதுர இலக்கங்களைக் கொண்ட தொகுதி

I. தொகுதி - A II. தொகுதி- C III. தொகுதி - D IV. தொகுதி - B

| A | B | C | D |
|---|---|---|---|
| கத்தரி | பலா | தோடை | புடலங்காய் |
| வெண்டி | மா | கொய்யா | பூசணி |
| அன்னாசி | வாழை | கரட் | வாழை |
| தக்காளி | பயற்றை | மாதுளை | வெண்டி. |

10. மேலே தரப்பட்டுள்ள நான்கு தொகுதிகளில் குறைந்தது ஒரு மரக்கறி வகையை கொண்ட தொகுதி.

I. Bயும், Cயும் II. Aயும் Dயும் III. Aயும் Cயும் IV. Bயும் Dயும்

| | | | |
|---|---|---|---|
| 5 | 4 | 3 | 2 |
| A | | 5 | 4 |
| 4 | | 2 | |
| 2 | 5 | B | |

11. வெற்றிடம் Aயில் வரவேண்டிய இலக்கங்கள்.
   I. 3 4 / 2 II. 3 2 / 3 III. 4 2 / 3 IV. 5 4 / 3

12. வெற்றிடம் Bயில் வரவேண்டிய இலக்கங்கள்.
   I. 2 / 5 4 II. 5 / 3 4 III. 5 / 4 3 IV. 3 / 4 2

13. மாசிமாதம் 11ம்திகதி வெள்ளிக்கிழமையாயின் அம்மாதத்தின் 25ம் திகதிக்கு அடுத்தநாள் என்ன கிழமையாகும்.
   I. சனிக்கிழமை II. வெள்ளிக்கிழமை III. புதன்கிழமை IV. திங்கள்கிழமை

14. Aயினதும், Bயினதும் வயதின் கூட்டுத்தொகை 32 ஆண்டுகளாகும். Aயை விடB, எட்டு ஆண்டுகள் மூத்தவன் அல்லன். எனில் Aயின் வயது யாது?
   I. 8 ஆண்டுகள் II. 10 ஆண்டுகள் III. 12 ஆண்டுகள் IV. 20 ஆண்டுகள்

15. கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்வதற்கான தூரம் 175Km ஆகும் எனில் குமரன் கொழும்பிலிருந்து கண்டிக்குச்சென்று வருவதற்கான மொத்ததூரம் யாது?

I. 1.350km II. 175km III. 250km IV. 275km

16. 15m நீளமான குழாய் ஒன்று இரு துண்டுகளாக வெட்டப்பட்டது. பெரிய குழாய் துண்டின் நீளமானது. சிறிய குழாய்த்துண்டின் இரு மடங்காகும் எனில், சிறிய குழாய் துண்டின் நீளம் யாது?

I. 2m II. 5m III. 8m IV. 10m

17. அடுத்துவரும் எண்ணைத் தெரிந்து கோடிடுக.

2578 → 5782 → 7825

I. 8725 II. 8257 III. 7852 IV. 8527

18. அடுத்துவரும் சொல்லைத் தெரிந்து கோடிடுக.

பவனம் → வதனம் → தகனம்

I. கனம் II. தவணை III. கவனம் IV. வதம்

இடங்களுக்கு இடையிலான தூரம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

| | அம்பாறை | பொலநறுவை | கண்டி | காலி |
|---|---|---|---|---|
| கண்டி | | | | 70km |
| பொலநறுவை | | | 185km | — |
| அம்பாறை | | 205km | — | 460km |
| கல்முனை | 170km | 375km | 560km | — |

19. பொலநறுவையிலிருந்து காலி செல்வதற்கான தூரம்.

I.285km II. 70km III.340km IV.255km

20. அம்பாறையிலிருந்து கண்டி செல்வதற்கான தூரம்

I.190km II.275km III.390km IV.292km

21. கல்முனையிலிருந்து காலி செல்வதற்கான தூரம்.

I. 530km II. 630km III. 475km IV. 725km

தரப்பட்டுள்ள பாடலை வாசித்து பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

அறிவை வளர்த்திடு.
ஆற்றலை விருத்தி செய்
ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்.
எதிர்கால சீலராக உன்னை மாற்றுவது -
இந்நிறுவனமே.

22. பாடலில் கூறப்பட்டுள்ள நிறுவனம் எது?

I. பாடசாலை II. வைத்தியசாலை
III. தொண்டர் நிறுவனம்
IV. இலவச சேவை நிலையம்

23. ஆற்றல் என்பது

I. சக்தி II. வலிமை III. திறன் IV. மகிழ்ச்சி

24. அறிவு என்பது

I. புத்தி II. மடமை III. சிந்தனை IV. நுட்பம்





25. கதம்பம் - ▲■★◎★

I. ◎↑■★ II. ◎▲■★ III. ★▲◎■ IV. ■◎■★

26. →⧄⧈△- பரதம் ஆயின் ⧈←⧄△ என்ற குறியீட்டுக்குப் பொருத்தமான சொல்

I. பந்தம் II. பருப்பு III. தகரம் IV. தருமம்

27. சரியான படிமுறை ஒழுங்கினை தெரிவு செய்க.

I. ஜனாதிபதி - மந்திரி - பாராளுமன்ற உறுப்பினர் - மாகாண சபை உறுப்பினர்
II. மந்திரி - பிரதமர் - ஜனாதிபதி - மாகாண சபை உறுப்பினர்
III. மாகாண சபை உறுப்பினர் - மந்திரி - பாராளுமன்ற உறுப்பினர் - ஜனாதிபதி
IV. பிரதமர் - மந்திரி - ஜனாதிபதி - பாராளுமன்ற உறுப்பினர்

28. பருமன் அடிப்படையில் ஒழுங்கு படுத்தப்பட்ட சரியான அமைப்பு

I. பூனை, எலி, நாய், மாடு II. எலி, பூனை, நாய், மாடு
III. மாடு, பூனை, நாய் எலி IV. மாடு, எலி, பூனை, நாய்

29. மாம்பழத்தினதும், கொய்யாப்பழத்தினதும் விலை ரூபா 20.00 கொய்யாப்பழம், மாம்பழத்தின் விலையை விட ரூபா 8 குறைவானது எனில் 5 மாம்பழங்களின் விலை

I. ரூபா.14.00 II. ரூபா.20.00 III. ரூபா.70.00 IV. ரூபா.60.00

30. அன்னாசிப் பழமொன்றின் விலை ரூபா.120.00 ஆகும். இதன் விலையிலும் 21/3 மடங்கு விலை கூடியது பலாப்பழம் எனில் 2 பலாப்பழங்களின் விலை யாது?


I. ரூபா.560.00 II. ரூபா.280.00 III. ரூபா.360.00 IV. ரூபா.420.00

31. 2kg மாவின் விலை ரூபா.140.00 ஆகும். 750g மாவின் விலையாது?

I. ரூபா 62.50 II. ரூபா.52.00 III. ரூபா.42.00 IV. ரூபா.52.00

32. இரண்டு முக்கோணத்தினையும் நான்கு வட்டத்தினையும் இரண்டு சதுரத்தினையும் ஒரு செவ்வகத்தினையும் கொண்ட உருவம்

I. II. III. IV.



33. **SLS; ISO** தரச்சான்றிதழ்களை உடைய பொருள் எது?

I. தீப்பெட்டி II. பால்மா III. சவர்க்காரம் IV. பிஸ்கட்

34. சிந்து : மதியின் தந்தையாவாள், பாலா : மதியின் சகோதரன் ஆவான். சிந்துவின் அக்காவின் கணவர் மதிக்கு என்ன உறவு முறையாவார்.

I. அத்தான் II. பெரியப்பா III. மாமி IV. சித்தி

வெற்றிடத்தில் வரவேண்டிய எண்களைத்தெரிவு செய்க.

35.
```
  2 5 7
+ 4 □ 2
  □ 9 9
```


| I | II | III | IV |
|---|---|---|---|
| 5 | 5 | 4 | 3 |
| 7 | 6 | 6 | 2 |


36.
```
  5 2 9
+ □ 3 □
  1 9 5
```

| I | II | III | IV |
|---|---|---|---|
| 3 4 | 4 3 | 2 4 | 1 4 |

37. தரப்பட்டுள்ள உருவினை மேலிருந்து பார்க்கும்போது மாற்றமின்றி தெரியும் வடிவத்தினை தெரிவு செய்க.

I II III IV







38. வீட்டிலிருந்து பாடசாலை செல்வதற்கு எத்தனை தடவைகள் வலப்பக்கம் திரும்பிச் செல்ல வேண்டும்

I. ஆறு II. மூன்று
III. நான்கு IV. ஐந்து

39. எத்தனை தடவைகள் இடப்பக்கம் திரும்பிச் செல்ல வேண்டும்.

I. ஏழு II. நான்கு
III. மூன்று IV. ஐந்து



40. நட்சத்திரங்களில் 3/5 பங்கு எவ்வளவு?

I. 16 II. 08
III. 10 IV. 12

**விடைகள் அடுத்த "தென்றலில்" வெளிவரும்.**
**(ஆ-ர்)**





ஆண், பெண் இருபாலாருக்கும் சகல விதமான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும். வீதி ஒழுங்கு மற்றும் இயந்திரவியல் பற்றிய பாடங்கள் தரமான ஆசிரியர்கள் மூலம் ஒழுங்கு முறையில் இலவசமாக கற்றுக்கொடுக்கப்படும்.

VEHICLE HIRE



திருமண வைபவங்களுக்கு கார் மற்றும் சொகுசு பஸ் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு.........

IYNGARAN LEARNERS
NO. 61, STATION CROSS ROAD
BATTICALOA
TEL: 065-265068 / 077-3138372

AD/0026


# மட்டுநகரில்.........



- வெனிலா ஐஸ் கிறீம்
- கஜு ஐஸ்கிறீம்
- பாலூடா
- அன்னாசி ஜூஸ்
- சிற்றுண்டி வகைகள்
- சிற்றுண்டி ஸ்பெஷல் ஓடர்கள்











- செர்ரி புரூட்
- புரூட் சலட் ஐஸ்கிறீம்
- ஜெலி ஐஸ் கிறீம்
- பெனி கஜு ஐஸ்கீறீம்
- மாம்பழ ஜூஸ்
- விளாம்பழ ஜூஸ்
- மாதுளம்பழ ஜூஸ் (ஸ்பெஷல் தயாரிப்பு)





போன்றவற்றை உடனுக்குடன் தயாரிக்கப்பட்ட நிலையில்
பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.

# NEW HAPPY CREAM HOUSE

# நியூ ஹெப்பி கிறீம் ஹவுஸ்

AD/0029

19, மத்திய வீதி,
மட்டக்களப்பு.
தொ.பே.இல. : 065-3655491 / 077-6170810

வணசிங்கா பிரிண்டர்ஸ் 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு.